
# திருக்கோயில்



செப்டம்பர்
2002

விலை
ரூ 7.00





சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் 15.8.2002 சுதந்திரத் திருநாள் அன்று சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திருமிகு தளவாய் சுந்தரம் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ஆணையாளரின் நேர்முக உதவியாளர் திருமிகு ஆ. குப்புசாமி பி.ஏ. பி.எல். அவர்களும், திருக்கோயில் உதவி ஆணையாளர் / செயல் அலுவலர் திருமதி த. காவேரி பி.ஏ. பி.எல். அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 1000.00 |

மாலை 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | சித்ரபானு - ஆவணி செப்டம்பர் 2002 | மணி 9



சிறப்பாசிரியர்

**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.**

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

**திருமிகு ப. இராஜா,** பி.எஸ்சி., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி,** பி.ஏ. பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா,** எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

**கேட்டதெல்லாம் கொடுக்கும்**
**சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன்**

## பொருளடக்கம்


**திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை விரிவுபடுத்துகிறோம்**
- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

**தூண்டுதவ விளக்கனையார் திலகவதியார்**
- முனைவர் த. அமிர்தலிங்கம்

**துஷ்ட சகவாசம் (நீதிக்கதை)**
- கலைமாமணி மா. இலட்சுமணன்

**என்றும் பதினாறு** - டாக்டர் டி. செல்வராஜ்

**திருவான்மியூர் மருந்தீசுவரர்** - இராஜேஸ்வரி விசுவநாதன்

**அன்னைமீனாட்சி** - கவிஞர் சொக்கலிங்கம்

**ஸ்ரீசந்தோஷி மாதா** - மீனாட்சி கோகுலவாசன்

**நந்தகுமாரன் செய்த விந்தை** - ரங்கமணிப் பாட்டி

**கன்னனின் புன்னகை** - இந்திரா ஆராஅமுதன்

**தீரா நோய் தீர்க்கும் ஸ்ரீசீராள சிறுத்தொண்டர் திருக்கோயில்**
- என்.எம்.கே. ஆறுமுகம்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி: *8279407*

செப்டம்பர் 2002

# தமிழ்நாட்டில் மேலும் 63 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டம்

## - மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்

நம் இந்தியத் திருநாட்டின் 55-வது சுதந்திரதின விழாவையொட்டி சென்னை கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்துப் பேசுகையில் அன்னதானத் திட்டம் பற்றித் தெரிவித்த விவரம் பின்வருமாறு:

தமிழக சட்டமன்றப் பேரவையில் 9.3.2002 அன்று மேதகு ஆளுநர் உரையில் தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட திருக்கோவில்களில் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் ''அன்னதானத் திட்டம்'' என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து சென்னை மைலாப்பூரில், உள்ள கபாலீஸ்வரர் திருக்கோவிலில் 23.3.02 சனிக்கிழமை அன்று பகல் 12.15 மணி அளவில் பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் அன்னதானத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை நான் தொடங்கி வைத்தேன். இந்த திட்டத்தின்படி நாள் தோறும் இந்த திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

மேலும் முதற்கட்டமாக தமிழ் நாட்டில், பல்வேறு ஊர்களில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 63 திருக்கோவில்களில் என்னுடைய அமைச்சரவை சகாக்கள் இத்திட்டத்தை 23.3.02 சனிக்கிழமை அன்று தொடங்கி வைத்தார்கள்.

இந்தத் திட்டத்தை அமுல் படுத்த தேவைப்படும் நிதி நன்கொடையாளர்களிடமிருந்து திரட்டப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு அமோகவரவேற்பு கிடைத்துள்ளது.

எனவே இத்திட்டத்தினை தமிழ்நாட்டிலுள்ள மற்ற திருக்கோவில்களிலும் செயல்படுத்த வேண்டும் எனக் கோரிக்கைகள் பல வந்த வண்ணம் உள்ளன.

எனவே இரண்டாவது கட்டமாக, மேலும் 63 திருக்கோவில்களில் 15.8.02 (வியாழக்கிழமை) இன்று முதல் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காக நிதி அளிக்க விரும்புவோர் இந்தத் திருக்கோவில்களில் வைக்கப்பட்டிருக்கும் தனியான உண்டியல்களில் செலுத்தலாம்.

தவிர, இந்த அன்னதானத் திட்டத்திற்கு உதவிட விரும்புவோர், தாங்கள் விரும்பும் திருக்கோவிலுக்கு தலா ரூ. 15,000 செலுத்திக் கட்டளைகளை ஏற்படுத்தலாம். அந்தக் கட்டளைகளிலிருந்து பெறப்படும் வட்டி வருமானத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கட்டளைதாரர் விரும்பும் நாளன்று குறைந்தபட்சம் 120 நபர்களுக்கு அன்னதானம் செய்ய அந்தந்தத் திருக்கோவில் மூலம் ஏற்பாடு செய்யப்படும்.

எனவே தமிழகத் திருக்கோவில்களில் அன்னதானக் கட்டளைகளை ஏற்படுத்த பொது மக்கள் பெரும் எண்ணிக்கையில் முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்காக முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப்படும் 63 திருக்கோவில்களில், 24.3.2002 ஞாயிற்றுக்கிழமை அன்று வகுப்புகளும் துவக்கி வைக்கப்படும் என்றும் தெரிவித்து இருந்தேன். அவ்வாறு இந்த வகுப்புகள் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 3 மணி முதல் 4 மணி வரையிலோ அல்லது 4 மணி முதல் 5 வரையிலோ நடத்தப்படுகின்றன.

இரண்டாவது கட்டமாக, அன்னதானத் திட்டம் செயல்படும் 63 திருக்கோவில்களில் ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறியை போதிக்கும் வகுப்புகள் ஞாயிறு தோறும் குழந்தைகளுக்குக் குறைந்தது ஒரு மணி நேரம் மாலை 3 மணி முதல் 4 மணி வரையிலோ அல்லது 4 மணி முதல் 5 மணி வரையிலோ நடத்தப்படும்.

தமிழக அரசு அமல்படுத்தும் இந்தத் திட்டங்களை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள தமிழக மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எந்தெந்தக் கோவில்களுக்கு அன்னதானத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்ற விவரம் வருமாறு:-

**சென்னை மாவட்டம்**

ஏகாம்பரேசுவரர் திருக்கோவில், தங்கசாலை, சென்னை.

கங்காதீஸ்வரர் திருக்கோவில், புரசைவாக்கம், சென்னை.

மருந்தீஸ்வரர் திருக்கோவில், திருவான்மியூர், சென்னை.

மகாலட்சுமி திருக்கோவில், பெசன்ட் நகர், சென்னை.

முண்டகக் கண்ணியம்மன் திருக்கோவில், மயிலாப்பூர், சென்னை.

**திருவள்ளூர் மாவட்டம்**

மகிஷாசூரமர்த்தினி திருக்கோவில், மத்தூர், (இணைப்பு சுப்பிரமணிய சாமி திருக்கோவில், திருத்தணி).

**வேலூர் மாவட்டம்**

எல்லையம்மன் திருக்கோவில், வெட்டுவானம்

**திருவண்ணாமலை மாவட்டம்**

மாரியம்மன் திருக்கோவில், புதூர் செங்கம்.

**காஞ்சிபுரம் மாவட்டம்**

கந்தசுவாமி திருக்கோவில், திருப்போரூர், செங்கற்பட்டு வட்டம்.

சுப்பிரமணியசுவாமி திருக்கோவில், வல்லக் கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் வட்டம்.

**விழுப்புரம் மாவட்டம்**

சுப்பிரமணியசுவாமி திருக்கோவில், மயிலம்.

**ஈரோடு மாவட்டம்**

சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், சென்னி மலை.

பெரியமாரியம்மன் வகையறா திருக்கோவில், ஈரோடு.

கொண்டத்துக் காளியம்மன் திருக்கோவில், பாரியூர்.

மகுடேசுவரர் வகையறா திருக்கோவில்கள், கொடுமுடி.

வீரகுமாரசுவாமி திருக்கோவில், வெள்ள கோயில்.

**கோயமுத்தூர் மாவட்டம்**

மாசானியம்மன் திருக்கோவில், ஆனைமலை.

பட்டீசுவரசுவாமி திருக்கோவில், பேரூர்,

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் அன்னதானத் திட்ட நன்கொடை

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் அன்னதானத் திட்டத்திற்குத் தம் ஜுன் 2002 மாதச் சம்பளத்தை வழங்கி யுள்ளார்கள்.



அரங்க நாதசுவாமி திருக்கோவில், காரமடை.

தண்டு மாரியம்மன் திருக்கோவில், கோவை.

விஸ்வேஸ்வரர் மற்றும் வீரராகவபெருமாள் திருக்கோவில், திருப்பூர்.

ஐயப்பசுவாமி திருக்கோவில், புதுசித்தாபுதூர்.

அவிநாசிலிங்கேஸ்வரர் திருக்கோவில், அவிநாசி.

**பெரம்பலூர் மாவட்டம்**

கலியுகவரதராஜ பெருமாள் திருக்கோவில், கள்ளக்குறிச்சி.

**திருச்சி மாவட்டம்**

ஜெம்புகேசுவரர் அகிலாண்டேஸ்வரியம்மன் திருக்கோவில், திருவானைக்காவல்.

பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோவில், குணசீலம்.

**கரூர் மாவட்டம்**

கல்யாணபசுபதீஸ்வரர் திருக்கோவில், கரூர் நகர்.

**தஞ்சாவூர் மாவட்டம்**

கோடியம்மன் திருக்கோவில், இணைப்பு அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர் நகர்.

முல்லைவனநாதசுவாமி திருக்கோவில், திருக் கருக்காவூர்.

தேனுபுரீஸ்வரர் திருக்கோவில், பட்டீஸ்வரம்.

நாகநாதசுவாமி திருக்கோவில், திருநாகேஸ் வரம்.

**திருவாரூர் மாவட்டம்**

இராஜகோபாலசுவாமி திருக்கோவில், மன்னார் குடி,

மகாமாரியம்மன் திருக்கோவில், வலங்கை மான்,

ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோவில், ஆலங்குடி வலங்கை மான்வட்டம்.

**நாகப்பட்டினம் மாவட்டம்**

சுப்பிரமணியசுவாமி திருக்கோவில், எட்டுக் குடி.

உத்வேகநாதசுவாமி திருக்கோவில், திருமணஞ்சேரி, மயிலாடுதுறை வட்டம்.

**கடலூர் மாவட்டம்**

விருத்தகிரீஸ்வரர் திருக்கோவில், விருத்தாச் சலம்,

கொளஞ்சியப்பர் திருக்கோவில், விருத்தாச் சலம்.

**சிவகங்கை மாவட்டம்**

கற்பக விநாயகர் திருக்கோவில், பிள்ளையார் பட்டி,

கொப்புடையநாயகியம்மன் திருக்கோவில், காரைக்குடி.

**விருதுநகர் மாவட்டம்**

வன்னிவிநாயகர் திருக்கோவில், மடம் சின்ன ஓடைப்பட்டி,

விஸ்வநாதசுவாமி திருக்கோவில், சிவகாசி.

**மதுரை மாவட்டம்**

மாரியம்மன் திருக்கோவில், வண்டியூர் தெப்பக் குளம் இணைப்பு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில், மதுரை.

காளமேகப் பெருமாள் திருக்கோவில், திருமோகூர்.

சோலைமலை முருகன் திருக்கோவில், அழகர் கோவில்.

**திண்டுக்கல் மாவட்டம்**

கோபி நாதசுவாமி திருக்கோவில், ரெட்டியார் சத்திரம்,

கோட்டை மாரியம்மன் திருக்கோவில், திண்டுக்கல்.

**தேனி மாவட்டம்**

மீனாட்சி சுந்தரேசுவரர் மற்றும் தர்மசாஸ்தா திருக்கோவில், ஆண்டிப்பட்டி.

**திருநெல்வேலி மாவட்டம்**

காசி விசுவநாதசுவாமி திருக்கோவில், தென்காசி.

**தூத்துக்குடி மாவட்டம்**

பூவனநாத சுவாமி திருக்கோவில், கோவில் பட்டி.

முத்தாரம்மன் திருக்கோவில், குலசேகரப் பட்டினம்.

**கன்னியாகுமரி மாவட்டம்**

பகவதியம்மன் திருக்கோவில், மண்டைக்காடு, (கன்னியாகுமரி தேவஸ்தானத்துடன் இணைந்தது).

**சேலம் மாவட்டம்**

வெள்ளங்குடி முனியப்ப சுவாமி திருக்கோவில், ஜாகிர் அம்மாபாளையம்.

ஒருக்காமலை வரதராஜப் பெருமாள் திருக் கோவில், சங்ககிரிநகர்.

பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக் கோவில், செவ்வாய்பேட்டை.

பிரசன்ன வெங்கட ரமண சுவாமி திருக் கோவில், காருவல்லி, ஓமலூர் வட்டம்,

பத்ரகாளியம்மன் திருக்கோவில், மேச்சேரி.

சித்தேஸ்வரர் திருக்கோவில், கஞ்சமலை.

**தர்மபுரி மாவட்டம்**

சந்திர சூடேஸ்வரர் திருக்கோவில், ஓசூர்.

**நாமக்கல் மாவட்டம்**

அத்தனூர் அம்மன் திருக்கோவில், அத்தனூர், ராசிபுரம்.

**இராமநாதபுரம் மாவட்டம்**

பாகம் பிரியாள் சமேத வன்மீகநாதசுவாமி, திருக்கோவில்,

**நீலகிரி மாவட்டம்**

விநாயகர் திருக்கோவில், குன்னூர்.

**புதுக்கோட்டை மாவட்டம்**

வீரமாகாளியம்மன், திருக்கோவில், பெரமூர்.

மேற்கண்ட 63 கோவில்களுக்கு அன்னதானத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டு இன்று (15.8.02) முதல் அன்னதானம் வழங்கப்படுகின்றது.

***

# தூண்டுதவ விளக்கனையார் திலகவதியார்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

''சைவ நெறிதான் பெற்ற புண்ணியக் கண் இரண்டு'' எனச் சைவசமயத்தின் இருகண்களாகத் திருஞானசம்பந்தரையும், திருநாவுக்கரசரையும் போற்று கின்றார் சேக்கிழார் பெருமான்.

ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்தரை மதுரைக்கு வரவழைத்து, சமண சமயக் காரிருளில் இருந்து நம் தமிழகத்தை மீட்ட பெருமை காரணமாக ''மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்'' என்று சேக்கிழார் போற்றுகின்ற பெருமைக்கு உரிய வரானார் 63 நாயன்மார்களில் ஒருவரான மங்கையர்க் கரசியார்.

ஆளுடைய அரசாகிய திருநாவுக்கரசரைக் ''கோளில் பரசமய நெறிக் குழியி''லிருந்து மீட்ட பெருமை காரணமாகத் ''தூண்டுதவ விளக்கனையார்'' என்று சேக்கிழார் போற்றுகின்ற பெருமைக்கு உரியவர் ஆகின்றார் 63 நாயன்மார்களில் ஒருவராக இல்லா விட்டாலும், நாவுக்கரசரை சைவசமயக் குரவர்களில் ஒருவராக ஞாலத்திற்குத் தந்தருளிய பெருமைக்கு உரியவரான நம் திலகவதியார்.

திருக்கோயில்கள் தோறும் உழவாரப் பணி செய்த திருத்தொண்டின் காரணமாக ''உலகேத்தும் உழவாரப் படையாளி'' என்று சிறப்பிக்கப் பெறுகிறார் நம் திருநாவுக்கரசர் என்றால், அவரை சைவ சமயத் திற்கு மீட்டு அவருக்கு ''உழவாரப் பணி'' புரியக் கற்பித்த ''ஞானகுரு'' என்ற பெருமை அவருடைய தமக்கையாரான திலகவதியாருக்கே உண்டு என்பதால் அவருடைய ஒப்பற்ற அருள்வரலாற்றினை அறிந்து பயன்பெற வேண்டியது மெய்யன்பர்களாகிய நம் அவசிய கடமையும் ஆகிறது.

திருநாவுக்கரசருடைய பெருமையை ஒரு நாவினைக் கொண்டு உரைத்தல் அருமையானது என்கிறார் சேக்கிழார்

''திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவல் உறுகின்றேன், பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன்''

(திருநாவுக்கரசர் புராணம்)

என்றே திருநாவுக்கரசரின் சரிதம் கூறத் தொடங்கு கின்றார் சேக்கிழார் பெருமான். இப்பாடலால் ஆயிரம் நா கொண்ட ஆதிசேடன்தான் திருத்தொண்டின் அருட்செல்வர் திருநாவுக்கரசரின் பெருமையைக் கூறவல்லவர் என்ற குறிப்பையும் நமக்குத் தந்து விடுகின்றார் சேக்கிழார்.

இவ்வாறு ஆயிரம் நாவால் போற்றக்கூடிய அளவு திருநாவுக்கரசர் சைவசமயத் திருப்பணிகள் ஆற்றி உள்ளார் என்றால், அவரை சைவ சமயத்திற்கு மீட்டுத் தந்த முழுமுதல் பெருமைக்கும் உரிய ஒப்பற்றவர்தாம் ''தூண்டுதவ விளக்கனையார்'' என்று சேக்கிழார் போற்றும் நம் திலகவதியார்.


திலகவதியாரின் சரித்திரத்தையும், பெண்மை யையும் திருநாவுக்கரசர் சரித்திரத்துடன் இணைத்தே பாடியுள்ளார் தெய்வச் சேக்கிழார் பெருமான். திருநாவுக் கரசரின் சரிதத்தை 429 பாடல்களில் பாடிப் பரவுகிறார் சேக்கிழார் என்றால் இதில் முக்கியமான முதற்பகுதி - 78 பாடல்களில் திலகவதியார் திருநாவுக்கரசரைச் சைவ சமயத்திற்கு மீட்டுத் தந்த அற்புத வரலாற்றை மிகச் சிறப்பாக விவரித்துள்ளார் நம் சேக்கிழார் பெருமான்.

மண்ணின் துகள் அன்றி மற்றைத் துகள் இல்லா ஒழுக்கம்சான்ற மக்கள் வாழும் பெருமை மிகுந்த திருமுனைப் பாடி நாடு சமயகுரவர் நால்வருள் அப்பர், சுந்தரர் ஆகிய இரண்டு அருளாளர்கள் அவதாரம் செய்ய தவம் செய்த நாடாகும்.

இதனைச் சேக்கிழார் பெருமான்,

''மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால் சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ? பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடி திறம்பாடும்
சீர்ப்பாடும்''

என்று திருமுனைப்பாடி நாட்டின் பெருமையைப் பாடுதலும் தம்மால் ஆகக்கூடியது அல்ல என்று வியந்து கூறுகின்றார்.



தேவார மூவரில் இருவர் தோன்றிய பெருமை உடையது திருமுனைப்பாடி நாடு என்பதை வில்லிப் புத்தூர் ஆழ்வாரின் புதல்வரான வரந்தருவாரும்

''செஞ்சடைக் கடவுளைப் பாடி
யாவரும் மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநா டிந்தநன் னாடு''

என்று போற்றியிருக்கக் காணுகின்றோம்.

பெண்ணை நதி பெருகி ஓடிக் கரும்புத் தோட்டம், வாழைத்தோட்டம், கமுகுத் தோட்டம், நெற்பயிர்களின் கூட்டம் என வளமலியும் இத்தகைய திருமுனைப் பாடி நாட்டில் அமைந்து விளங்கும் திருவாரூர் எனும் ஊரில் தான் சைவ சமயத்தை ஏழுலகிலும் தழைக்கச் செய்யும் தவத்திற்குக் காரண மான திலகவதியாரும், திருநாவுக்கரசரும் தோன்றி னார்கள் என்று விவரிக்கின்றார் சேக்கிழார் பெருமான்.

''சைவ நெறிச் சிவம் பெருக்கும் திருவாம் ஊர் திருவாமூர்'' என்பது சேக்கிழாரின் நயம் செறிந்த வாக்கு. இத்தகைய திருவாமூரில், வேளாண் குலத்தின் கண் பெருமை மிகுந்த குறுக்கையர் தங்குடியில் மிக்க பெருஞ் சிறப்பினைப் பெற்று விளங்கிய புகழனார் - மாதினியார் தம்பதியருக்குச் செந்தாமரைமலர் மேல் வீற்றுறையும் திருமகளே போல் திலகவதியார் முன் தோன்ற, சில ஆண்டுகள் கழித்து இருளகற்றி ஒளி விளங்கும் சூரியனே போல் மருள் நீக்கியார் (அதுதான் திருநாவுக்கரசரின் இயர்பெயர்) அவதாரம் செய்தார் என்று பாடுகின்றார் சேக்கிழார் பெருமான்.

''புகழனார் தமக்குரிமைப் பொருவில்குலக் குடியின்கண்
மகிழவரும் மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்
நிகழுமலர்ச் செங்கமல நிரையிதழின் அகவயினில்
திகழவருந் திருவனைய திலகவதியார் பிறந்தார்''

(திருநாவுக்கரசர் புராணம், 17)

''திலகவதியார் பிறந்து சில முறை ஆண்டு அகன்றதன்பின்
அலகில் கலைத் துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில் வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர் போற்பின்
மலருமருள் நீக்கியார் வந்துஅவ தாரம் செய்தார்''

(திருநாவுக்கரசர் புராணம், 18)

மறுஒழித்த இளம்பிறை போல் திலகவதியாரும், மருள்நீக்கியாரும் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறார்கள். திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயதாகிறது.

அரசனின் படைத்தலைவரும், வேளாண் குலத் தலைவரும், கல்வி, கேள்விகளில் வல்லவருமான கலிப்பகையார் என்பவர் திலகவதியாரைத் திருமணம் முடிக்க விரும்பிப் பெரியவர்களைப் புகழனாரின் இல்லத்திற்கு அனுப்புகிறார்.

கலிப்பகையாரின் குலமும், குணமும், கல்வி, தொழில் முதலான பலவும் புகழனார் மாதினியார் குடும்பத்தாருக்கு மகிழ்வினைத் தந்தபடியால் திலகவதியாரைக் கலிப்பகையாருக்கு மணம் முடித்துத் தர இசைகிறார்கள்.

அந்நேரம் பார்த்து வடநாட்டு மன்னருடன் போர் நேரவே, அரசனின் ஆணைக்கு இணங்கிப் பெருஞ்சேனையுடன் கலிப்பகையார் போருக்குப் புறப்பட்டுச் சென்று விடுகிறார்.

வடநாட்டில் பகைவருடன் கலிப்பகையார் போர் புரிந்துகொண்டிருந்தபோது, வினை வயத்தால் பிணிவாய்ப்பட்டு வாடிய புகழனார், ஆயுள் முடிந்து விண்ணுலகம் செல்ல நேரிட்டு விடுகிறது. கற்புநெறி வழுவாத புகழனாரின் மனைவி மாதினியாரும் தம் மக்கள் நலன் எண்ணாமல், கணவனார் சென்ற விண்ணுலகமே சென்று சேர்ந்து விடுகின்றார்.

தந்தையும், தாயும் அடுத்தடுத்து இறந்துபோகத் திலகவதியாரும், மருள்நீக்கியாரும் கொண்ட துன்பத்திற்கு அளவே இல்லை. இந்நிலையில்தான் ''பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்'' என்ற பழமொழிக்கு இணங்க பகீர் எனும் செய்தி - போர்க்களத்தில் கலிப்பகையார் தம் உயிரினைக் கொடுத்துப் புகழினை எய்தி, வீரசுவர்க்கம் சேர்ந்தார் எனும் செய்தி - திலகவதியாருக்கு வருகிறது.

இவ்வளவு இளைய வயதில் எவ்வளவு பெரிய சோதனைகள்? சிறு முதுக்குறைவி திலகவதியார் ஒரு பெரிய முடிவிற்கு வருகிறார்: ''எமது தாயும் தந்தையும் கலிப்பகையாருக்கு என்னை மணம் பேசி முடித்தனர். அதனால் அவர் எனக்கு மங்கலநாண் அணிவிக்காத போதும், அவருக்கு நான் மனைவியே ஆவேன். அவர் உயிர் துறந்தபின் நான் உயிர் வாழ்வதில் பொருள் இல்லை. ஆகவே என் உயிரை அவர் உயிரோடு சேர்ப்பேன்'' என்ற ஒரு முடிவினுக்கு வந்து விடுகிறார் திலகவதியார்.

அப்பொழுது திலகவதியாரின் திருவடிகளில் விழுந்து மருள்நீக்கியார் 'அம்மாவும், அப்பாவும் இறந்தபிறகு தமக்கையான தாங்கள் இருக்கிறீர்கள் என்ற துணிவால்தான் நான் உயிர் வாழ்ந்திருந்தேன். என்னைத் தனித்து விட்டு நீங்கள் உயிர்விடத் துணிவீர்கள் ஆனால், உங்களுக்குமுன் என் உயிரை நான் விட்டு விடுவேன்'' என்று கதறி அழுகிறார்.

இத்தகைய உருக்கமான நிகழ்ச்சிகளைச் சேக்கிழார்

''எந்தையும்எம் அனையும் அவர்க்குஎனைக்
கொடுக்க இசைந்தார்கள்
அந்தமுறையால் அவர்க்கே உரியதுநான்
ஆதலினால்
இந்த உயிர் அவர் உயிரோடு இசைவிப்பன்''
எனத் துணிய
வந்தவர்தம் அடியிணைமேல் மருள்நீக்கியார்
விழுந்தார்.

(திருநாவுக்கரசர் புராணம், 32)

''அந்நிலையில் மிகப் புலம்பி'' அன்னையும்
அத்தனும் அகன்ற
பின்னையும்நான் உமை வணங்கப் பெறுதலினால்
உயிர்தரித்தேன்.
என்னை இனித் தனிக்கைவிட்டு ஏகுவீர்
எனில் யானும்
முன்னம் உயிர் நீப்பன்'' என மொழிந்திடரின்
அழுந்தினார்''

(திருநாவுக்கரசர் புராணம், 33)

இவ்வாறாகத் தம்பி மருள்நீக்கியார் திலகவதியாரின் கால்களைப் படித்துக் கொண்டு கதறி அழும் நிலையில்தான் ''தம்பிக்காக உயிர் வாழ்தல் வேண்டும்'' என்ற தீர்மானத்திற்கு வருகிறார் திலகவதியார். நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையாராம் கணவனார் உயிர் நீங்கவிட்ட படியால் இனி தவச்செல்வியாக வாழ்வது தம் கடமை என்று அருள்வடிவாகிய திலகவதியார், தவச்செல்வியாக வாழத் தம் தம்பியாரின் பொருட்டு ஒரு தீர்மானத்திற்கு வந்தார் எனத் திலகவதியாரின் தியாகத்தைப் போற்றிப் புகழ்கின்றார் சேக்கிழார் பெருமான்.

''தம்பியார் ஊராக வேண்டும் எனைவத்த தயா
உம்பர் உலகு அணையவுறுநிலைவிலக்க,
உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும்
இம்பர்மனைத் தவம் புரிந்து திலகவதியார்
இருந்தார்''

(திருநாவுக்கரசர் புராணம், 34)

கைம்பெண் விரதம் பூண்டு திலகவதியார் கண்ணுக்குக் கண்ணாக இருந்து வளர்க்கின்ற படியால்

மருள் நீக்கியாரின் மனத்துயரம் நீங்குகின்றது. அவரும் கல்விகேள்விகளில் வல்லவராக அறிவு நிரம்பப் பெறுகிறார். அடுத்தடுத்து அவருடைய வீட்டில் நிகழ்ந்து விட்ட துயரச் சம்பவங்களால் தேகநிலையாமையைத் தெளிந்து கொண்டவராய் அன்னதானம் செய்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், நந்தவனம் வளர்த்தல், குளம்வெட்டுதல் போன்ற பல புண்ணிய காரியங்களில் தமக்கையாரின் தூண்டுதலால் ஈடுபட்டு நற்புகழினைப் பெறுகின்றார் மருள்நீக்கியார்.

அளவுக்கதிகமான துயரங்கள் நிகழ்ந்து பசுமரத்தணிபோல் அவர் மனத்தில் பதிந்து விடவே தாம் பிறந்ததும் வளர்ந்ததுமான சைவசமயத்தின்பால் ஐயமும், வெறுப்பும் மெல்லத் தோன்றி அவரிடம் நாளுக்குநாள் வளர்ந்தவாறு இருந்தது. அப்பொழுது கொல்லாமையைக் கொள்கையாகக் கொண்டு போற்றிய சமண சமயத்தின் உண்மை நிலை அறியாதவராய் சைவ சமயத்திலிருந்து மெல்ல விலகிச் சமண சமயம் சாரத் தொடங்கிவிட்டார் மருள்நீக்கியார்.

''அவன் அருளால் அவன்தான் வணங்கி'' என்ற அருமையான தொடர் திருவாசகத்தில் வருகின்றது. இறைவனின் அருள் இல்லாவிட்டால் இறைவனை வணங்குவதும் இயலாத ஒன்றாய் மாறிவிடும்.

இறைவர் சற்றே பாரா முகமாக இருந்து ''பட்டுத் திருந்தட்டும்'' என்று அருளாது விட்டுவிட்டபடியால் மருள்நீங்கியார் சமண சமயம் சேர்ந்து விட்டார் என்று நயமுறப் பாடுகின்றார் சேக்கிழார் பெருமான்.

''நில்லாத உலகியல்பு கண்டு'' நிலையா வாழ்க்கை
அல்லேன்'' என்று அறத் துறந்து சமயங்கள்
ஆனவற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயங்
குறுகுவார்''

(திருநாவுக்கரசர் புராணம், 37)

திருவாமூரில் திலகவதியாருடன் வாழ்ந்திருந்த மருள்நீக்கியார் நாளடைவில் வீட்டிற்கே வராமல் பாடலிபுத்திரம் (திருப்பாதிரிப்புலியூர்) சென்று அங்கு இருந்த சமணப் பள்ளியிலேயே தங்கிச் சமணசமய நூல்கள் எல்லாம் கற்று, ''தருமசேனர்'' என்று சமணர்கள், பட்டமும், மதிப்பும் கொடுத்துப் பாராட்டக் கூடிய உயர்ந்த நிலையை அச்சமண சமயத்தில் பெற்று விடுகிறார்.

கைம்பெண் விரதம் பூண்டு, திலகவதியார் தவச்செ...ியாக வீட்டிலிலேயே இருந்து விட்டபடியால் தம்பி தம்கைமீறிப் போய்விட்டபிறகே, ''வித்தகராய் அமண் சமயத் தலைமையினில் மேம்பட்ட'' தம் தம்பியின் நிலையை உணர்ந்து கொண்டு, தம்பியைத் தூயசைவ நெறிக்கு மீட்டுக் கொண்டுவர இறைவரிடம் முறையிடுவது அன்றி வேறு வழியில்லை என்பதாகத் தெரிந்து கொண்டு, திருவாமூருக்கு அருகில் இருக்கும், திரிபுராதிகளைச் சிவபெருமானை சம்ஹாரம் செய்த மகிமை மிக்கதுமான திருவதிகை வீரட்டானத் திருத்தலத்திற்கு வந்து அங்கொரு மடம் அமைத்துக் கொண்டு, இறைவனுக்கு உகந்த திருப்பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு விடுகிறார்.

''சென்றுதிரு வீரட்டானத் திருந்த செம்பவளக்
குன்றை அடிபணிந்து கோதில் சிவச்சின்னம்
அன்றுமுதல் தாங்கி ஆர்வமுறத் தங்கையால்
துன்று திருப்பணிகள் செய்யத் தொடங்கினார்''

(திருநாவுக்கரசர் புராணம், 43)

''புலர்வதன்முன் திருவலகு பணிமாறிப் புனிறு
அகன்ற
நலமலிஆன் சாணத்தால் நன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளும்
கொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினால் திருப்பணிகள் பல
செய்தார்''


(திருநாவுக்கரசர் புராணம், 44)

இவ்வாறு நம் தமிழ்த்திருநாட்டில் முதன் முதலில் திருமடம் அமைத்து, இறைவர் திருப்பணிக்கே தம்மை முழுதும் அர்ப்பணித்துக் கொண்ட முதல் பெண்மணி என்ற பெருமைக்கு உரியவர் ஆகிறார் ''தூண்டுதவ விளக்கனையார்'' என்று சேக்கிழார் போற்றும் பெருமைக்கு உரியவராம் நம் திலகவதியார்.

திலகவதியாரின் உள்ளக் கவலை எல்லாம் ஒன்றே ஒன்றுதான். அது தம் பின் பிறந்த தம்பி, சமண சமயத்திலிருந்து தம்முடைய தாய்சமயமான சைவ சமயத்திற்கு மீண்டு வரவேண்டும் என்பதாகும். நாளெல்லாம் அவருடைய பிரார்த்தனை தம் தம்பியைப் பற்றியதாகவே இருந்தது என்பதைச் சேக்கிழார் பெருமான்

தூண்டுதவ விளக்கனையார் சுடராளியைத்
தொழுது ''என்னை
ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள
வேண்டும்'' எனப்பல முறையும் விண்ணப்பம்
செய்தனரால்.

(திருநாவுக்கரசர் புராணம், 46)



சிவமொன்று நெறிநின்ற திலகவதியார் இவ்வாறு பலமுறையும் விண்ணப்பம் செய்தால், சிவபெருமான் திருவருள் புரியாமல் இருப்பாரா?

''மன்னுதபோ தனியார்க்குக் கனவின்கண்
மழவிடையார்
''உன்னுடைய மனக்கவலை ஒழிநீ உன் உடன்
பிறந்தான்
முன்னமே முனியாகி, எமை அடையத் தவம்
முயன்றான்
அன்னவனை இனிச்சூலை மடுத்தாள்வம்''
என அருளி,''
(திருநாவுக்கரசர் புராணம், 48)

திருநாவுக்கரசருடைய முற்பிறவி வரலாற்றினை இங்கு நமக்கு இறைவர் கூறியருளுகின்றார். முற்பிறப்பில் வாகீச முனிவர் கயிலையில் தவம்புரிந்து கொண்டிருந்தார். அப்போது இலங்கையை ஆண்ட மன்னன், புஷ்பகவிமானத்தில் கயிலைமலைக்கு நேரே பறந்துவந்தான். நந்திஎம்பெருமான் ''இது சிவபெருமான் வாசம் செய்யும் திருக்கயிலாய மலை. இதனை வலம் வந்து வணங்கிப்போ'' என்று அறிவுறுத்தினார். ஆணவம் கொண்ட இலங்கைமன்னன் நந்திஎம்பெருமானிடம் ''குரங்குமாதிரி முகத்தை வைத்துக் கொண்டு நீ எனக்கு புத்தி சொல்கிறாயா?'' என்று சீறினான்.

அவனுடைய ஆணவம் அடங்கும் வகையில் நந்தியெம்பெருமான் ''என்னைக் குரங்கு என பழித்ததால், உன்நாடு ஒரு குரங்கினால் அழிந்து போகட்டும்'' எனச் சாபம் கொடுத்தார்.

அப்பொழுதும் ஆணவம் அடங்கப் பெறாத இலங்கை மன்னன் ''என் பிரயாணத்திற்குக் குறுக்கே நிற்கின்ற இந்தக் கயிலை மலையைப் பிடுங்கி எறிகிறேன், பார்'' என்று தனது இருபது கரங்களால் மலையை அசைக்க முயன்றான். சிவபெருமான், தம் கால் பெருவிரல் நுனி நகத்தை இலேசாக அழுத்தினார். மலை அழுந்தியது. அதனடியே அகப்பட்ட அரக்கன் ''ஆ'' என்று அலறித் துடித்தான்.

ஆயிரம் ஆண்டுகள் கயிலை மலையினடியில் சிக்கி அலறிக்கொண்டிருந்தான் அரக்கன், அவ்வாறு அழுது அரற்றிய காரணத்தால் அவ்வரக்கனுக்கு உண்டான காரணப் பெயரே ''இராவணன்'' என்பதாகும்.

அவ்வாறு அழுது அரற்றிய இராவணன் நிலை கண்டு பரிதாபப்பட்ட வாகீச முனிவர் ''சுவாமி இசைப் பிரியர், இசைக்கு அவர் மனம் உருகுவார்'' என்று கூறி அந்த ஆணவ மூடனுக்கு உதவி செய்தார். இராவணன் தன் குடலையே நரம்பாக்கி, சாமகானம் இசைத்து சிவபெருமானை வழிபட இறைவரும் வெளிப்பட்டு இராவணனுக்கு, ஐம்பதுலட்சம் ஆண்டுகள் வாழ்நாளும், சந்திரஹாசம் எனும் வாளும் கொடுத்து அருளினார்.

இவ்வாறு தீமை புரிந்த இராவணனுக்கு சகாயம் புரிந்த காரணத்தால் வாகீசர், பூவுலகிற்கு வந்து மருள் நீக்கியாராகப் பிறக்க நேர்ந்தது.

''முன்னமே முனியாகி எமை அடையத் தவம்
முயன்றான்
அன்னவனை இனிச் சூலை மடுத்தாள்வம்''

எனத் திலகவதியார் மனம் குளிரத் திருவருள் புரிந்து அருளுகின்றார் திருக்கெடில வீரட்டானேசுவரர்.

திலகவதியாரிடம் கூறியருளியவாறே ''தொண்டரை ஆளத் தொடங்கும் சூலைவேதனை தன்னை'' நெற்றிக்கண்ணர் உண்டாக்கியருள, அச்சூலை நோய் தருமசேனருடைய வயிற்றில் புகுந்து, வடவைத்தீயும், ஆலகால விடமும், வச்சிராயுதமும் போல குடைகின்றது.

சமணகுருமார் பலரும் வந்து, கமண்டலத்து நீரை மந்திரித்து தருமசேனர் குடிக்கத் தருகின்றனர். நோய் சிறிதும் தணியவில்லை., மயிற்பீலி கொண்டு தரும சேனரின் உடல் முழுவதும் தடவி விடுகின்றனர். முன்னையிலும் பன்மடங்காக நோய் பெருகித் தரும சேனர் துடிக்கின்றார்.

''இந்நோயைத் தீர்க்க நம்மால் முடியாது'' - எனக்கூறிச் சமணகுருமார்கள் தருமசேனரை கைவிட்டுப் போன நிலையில், மருள்நீக்கியாருக்குத் தம் தமக்கை திலகவதியாரின் நினைவு வரத் தமக்கு வந்த சூலை நோயைத் திலகவதியாரிடம் தெரிவிக்குமாறு தம் சமையற்காரனைத் திலகவதியாரின் திருமடத்திற்கு அனுப்பிவைக்கின்றார்.

அச்சமையற்காரனும் இரவோடு இரவாகப் புறப்பட்டு வந்து, விடியற்காலையில் நந்தவனத்திலிருந்து வெளிவரும் திலகவதியாரைப் பணிந்து ''உங்கள் திருத்தம்பியாரின் ஏவலினால் வந்தேன்'' என்று கூறத் ''தீங்குளவோ?'' என்று கேட்கின்றார் திலகவதியார்.

''கொல்லாது சூலைநோய் குடர்முடக்கித் தீராமை
எல்லாரும் கைவிட்டார். இது செயல். என்
முன்பிறந்த
நல்லாள்பால் சென்றியம்பி நான் உய்யும்படி
கேட்டிங்கு
அல்லாரும் பொழுதுஅணைவாய் என்றார்
என்று அறிவித்தான்''

(திருநாவுக்கரசர் புராணம், 57)

சமணர்கள் கொல்லாமை பேசுவார்களே தவிர கடைப்பிடிப்பவர்கள் அல்லர், கொல்லாமையைப் போர்த்துக் கொண்டு கொலைச் செயலில் ஈடுபடும் பசுத்தோல் போர்த்திய புலிகள் அமணர்கள் என்பதை மருள்நீக்கியார் நன்கு தெரிந்து கொண்டு விட்டபடியாலே, இரவோடு இரவாகச் சமணர்களுக்குத் தெரியாமல் தம் சமையற்காரனைத் தூது அனுப்புகின்றார். தமக்கையாரிடம் தகவல் கூறித் தமக்கையை அழைத்துக் கொண்டு இரவிலே இங்கு வந்து சேர் என்பதாகவும் மருள் நீக்கியார் கூறி அனுப்பியதை அச்சமையற்காரன் கூறச் சிவச் செல்வியராம் திலகவதியார் ''நன்று அறியா அமண் பாழி நண்ணுகிலேன் எனும் மாற்றம் சென்றவனுக்கு உரை'' என்று கூறுகின்றார்.

அவ்வாறே சமையற்காரனும் சென்று மருள் நீக்கியாரிடம் கூற, அப்போதே உண்மையில் மருள் நீங்கப்பெறும் திலகவதியாரின் திருத்தம்பியாரும் புன்சமயத் தொடர்பை நீங்குகின்றார். அதுவரை உடுத்தியிருந்த பாய் உடையைக் களைந்து, கமண்டலம், மயிற்பீலி நீங்கி, வெண்மையான ஆடையை உடுத்துக் கொண்டு, தம் நம்பிக்கைக்கு உரிய சமையற்காரன் தோள்மீது கையை ஊன்றி மெல்ல நடந்தவராய் இரவோடு இரவாக ஒருவருக்கும் தெரியாமல், மாதவர்கள் வாழும் திருவதிகையில், நம் தூண்டுதவ விளக்கனையார் திலகவதியார் வாழும் திருமடத்தை வந்து அடைந்து, திலகவதியாரின் திருவடிகளில் விழுந்து வணங்குகின்றார்.

''நந்தமது குலஞ்செய்த நற்றவத்தின் பயன்
அனையீர்!
இந்தஉடல் கொடுஞ்சூலைக் கிடைந்தடைந்தேன்
இனிமயங்காது
உய்ந்துகரை ஏறுநெறி உரைத்தருளும்''

என்று மருள்நீக்கியார் மனம் திருந்தியும், தெளிவுற்றும் பெருமை மிகுந்த தம் திருத்தமக்கையாரை வேண்ட, எம்பெருமான் - ஆளுடைய தம்பெருமான்

திருவருளை நினைந்து நினைந்து பரவசப்பட்ட வராய் நம் திலகவதியார்

''கோளில் பரசமய நெறிக் குழியில் விழுந்தறியாது
மூளும் அருந்துயர் உழந்தீர்! எழுந்தீர்''

என மொழிகின்றார். மேலும்

''கற்றை வேணியர் அருளே காணும் இது,
கழல்டைந்தோர்
பற்றுப்பார் தமைப் பணிந்து பணிசெய்வீர்''

எனவும் தம் திருத்தம்பியாருக்கு ''எழுக! சைவப் பணி செய்க!'' என்று ஆணை பிறப்பிக்கின்றார் திலகவதியார்.

''நமசிவாய'' என்கின்ற அஞ்செழுத்து மந்திரத்தை ஓதித் திருநீற்றினைத் தம்பியார்க்கு அணிவித்து அவரைப் பரசமயக் குழியிலிருந்து கரையேற்றியருளு கின்றார் நம் திலகவதியார்.

''திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப்
பெருவாழ்வு வந்ததெனப் பெருந்தகையார்
பணிந்தேற்றங்கு
உருவார அணிந்து தமக்கு உற்றவிடத்து
உய்யும்நெறி
தருவாராய்த் தம்முன்பு வந்தார்பின் தாம் வந்தார்.''

(திருநாவுக்கரசர் புராணம், 67)

திலகவதியார் திருநீறு வழங்கப் பெருந்தகை யாருக்குப் பெருவாழ்வு வந்தது, தமக்கையாரோடு சென்று திருவதிகை வீரட்டானேசுவரரைப் பணி கின்றார். தம் சூலை நோய் தீரப் பாடி வேண்டுகின்றார் மருள்நீங்கியார். உரைத்தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு பெற்று பாடிடும் முதற் திருப்பதிகம் ''கூற்றாயினவாறு விலக்கிலீர்'' எனத் தொடங்கும் திருப்பதிகம் ஆகும்.

''கூற்றா யினவாறு விலக்ககிலீர் கொடுமைபல
செய்தனநான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும்பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றா தென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறைஅம் மானே!''

''சுவம்பூ வொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்
நலந்நீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண்டு உழல்வாய்
உடல்உள் ளுறுசூலை தவிர்த் தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறைஅம் மானே''

இவ்வாறு பாடிக் கண்ணீர் விட்டுக்கதறி, முதல்வன் கருணைக் கடலில் மூழ்குகின்றார் மருள் நீக்கியார்.

அப்பொழுது

''நாவுக்கரசு என்று உலகேழினும் நின்
நாமம் நயப்புற மன்னுக''

என்று மருள்நீக்கியாருக்கு ''நாவுக்கரசர்'' என்ற நாமத்தை இறைவரே சூட்டியருளுகின்றார்.

முற்பிறவியில் தாம் வாகீச முனிவராக இருந்து இராவணனுக்கு உதவியது, அதனால் பூவுலகம் செல்ல இறைவன் பணித்தது எல்லாம் திருநாவுக்கரசருக்குத் தெளிவாகின்றது.

''இத்தன்மை நிகழ்ந்துழி நாவின் மொழிக்
கிறையாகிய அன்பரும் இந்நெடுநாள்
சித்தந்திகழ் தீவினையேன் அடையும் திருவோ
இது என்று தெருண்டறியா,
அத்தன்மையனாய இராவணனுக்கு அருளுங்
கருணைத்திறமான அதன்
மெய்த்தன்மை அறிந்து துதிப்பதுவே மேல்
கொண்டு வணங்கினர் மெய்யுறவே''

(திருநாவுக்கரசர் புராணம், 75)

என்ற பாடலில் சேக்கிழார் பெருமான் ''மெய்த்தன்மை அறிந்து'' என்ற சொற்றொடரால் திருநாவுக்கரசர் தம் முன் பிறவிச் செயலை உணர்ந்தார் எனக் குறிப்பில் உணர்த்தியுள்ள நயம் எண்ணி மகிழத்தக்கதொன்றாகும்.

திருநாவுக்கரசரை வாட்டிய சூலைநோய் நீங்கியது. திருநீறும், கண்டிகையும் புனைந்து, உழவாரப் படை கொண்டு சைவத் திருத்தொண்டிற்கே தம்மை அர்ப்பணித்துக் கொள்கிறார் திருநாவுக்கரசுப் பெருமான்.

திருநாவுக்கரசரை இவ்வாறு சைவசமயத்திற்கு மீளச் செய்த திலகவதியார் தம் திருத்தொண்டின் காரணமாகவே அவரைச் சேக்கிழார் பெருமான் ''தூண்டு தல்வ விளக்கு அனையார்'' என்ற சொற்றொடரால் அவரைப் பெருமை மிகப் போற்றுகின்றார். திலகவதி யார் தவவிளக்கு - அவரால் தூண்டப் பெற்றுச் சைவத் திருவிளக்கு ஆனவர் திருநாவுக்கரசர், ஆகவே திலகவதி யார் ''தூண்டு தவ விளக்கு'' எனச் சிறப்பிக்கப் படுகின்றார்.

# இறைவன் ஒருவனே

திருக்கோயில்களில் காட்சி அளிக்கும் துவார பாலகர்களில் ஒருவர் ஆள்காட்டி விரலைக் காட்டி நிற்பதைப் பார்க்கலாம். உள்ளே வழிபடச் செல்வோருக்கு வாசலிலேயே அவர் ''கடவுள் ஒன்றே'' என்ற தத்துவத்தை அறிவுறுத்துகிறார் என்பதே அதன் பொருள்.

மற்றொரு துவாரபாலகர் கையை விரித்துக் காட்டுவதையும் பார்க்கலாம். ''கடவுள் ஒன்றைத் தவிர வேறொன்றும் இல்லை'' என்பதை உணர்த்தவே அவர் இந்தக் கோலத்தில் நிற்கிறார்.

- அருளரசு திருமுருக
கிருபானந்தவாரியார் சுவாமிகள்

திருநாவுக்கரசரை சைவ சமயத்திற்கு மீட்டுத் தந்த அளவில் திலகவதியாரின் திருத்தொண்டு நிறைவு பெற்று விடுகிறது. ஆகவே தம் விருப்பம் நிறைவேறப் பெற்ற தவச்செல்வியாரான திலகவதியார் ''இறைவா'', என் விண்ணப்பத்தை ஏற்று, பொய்ச்சமயத்திலிருந்து என் தம்பியாரை மீட்ட உம் கருணைத் திறத்தை யான்பெற்றது போல் வேறு யார் பெற்றார்?'' என்று வியந்து போற்றுகின்றார் திலகவதியார். அதனைத் திருநாவுக்கரசர் புராணம் 78-வது பாடலில்

''மெய்ம்மைப் பணிசெய்த விருப்பதனால்
விண்ணோர் தனி நாயகனார் கழலில்
தம்இச்சை நிரம்ப வரம்பெறும்
அத்தன்மைப் பதிமேவிய தாபதியார்
''பொய்ம்மைச் சமயப்பிணி விட்டவர்முன்
போதும் பிணிவிட்டருளிப் பொருளா
எம்மைப் பணிகொள் கருணைத்திறம்
இங்குயார் பெற்றனர் என்ன இறைஞ்சினரே!''

எனக் கூறிப்போற்றுகின்றார். நம் திலகவதியாரைப் பற்றிய வரலாறு, இதற்குப் பின் திருநாவுக்கரசர் புராணத்தில் எங்கும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தம்மைப் பரசமயக் குழியிலிருந்து கரையேற்றிய தம் தமக்கையார் திலகவதியார் திருத் தொண்டினைச் சிறப்பித்துத் திருநாவுக்கரசரும்

''ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன்
தோன்றினராய்
மூன்றாய் உலகம், படைத்துகந்தான் மனத்துள்
இருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன்
திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்
அடியோங்களுக்கே''

என்ற தம் தேவாரப் பாடலில் ''தம் உடன் தோன்றிய'' திலகவதியாரைச் சிறப்பித்துப் போற்றியிருத்தல் காணுகின்றோம்.

நீரிலும், நெருப்பிலும் நின்று தவம் செய்ய வேண்டுவதில்லை; உடலை வருத்தி வாட்டி விரதம் இருத்தலும் வேண்டியதில்லை. ''நாவுக்கரசு'' ''நாவுக்கரசு'' என்று திருநாவுக்கரசர் திருநாமத்தைச் செபித்தால் வீடுபேறு பெற்று உய்யலாம் என்று கூறுகின்றார் சிவப்பிரகாச சுவாமிகள்.

''நாவுக்கரசு எனுமோர்
சொற்றான் எழுதியும் கூறியுமே என்றும்
துன்பில்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும்
பெருந்தகையே''

என்பது நால்வர் நான்மணிமாலைப் பாடல் பகுதியாகும்.

ஆகவே திருநாவுக்கரசர் திருநாமத்தைத் தம் தம்பியாருக்குப் பெற்றுத்தந்து, இப் பேருலகம் உய்வதற்கு வழிகாட்டியருளிய ''தூண்டுதவ விளக்கனையார்'' திலகவதியார் திருவடிகளைத் துதித்து நாமும் பிறவித்துன்பத்திலிருந்து கரையேறிக் கருணைக் கடல் சிவப்பரம் பொருளைச் சேர்ந்து இன்புறுவோம் ஆக!

***

# துஷ்ட சகவாசம்!

**- கலைமாமணி மா. லட்சுமணன்**

நியாயங்களும் நீதிகளும் காதோடு நின்று விடும் கதைகளாகி விடக்கூடாது. அவைகள் மனித வாழ்வில் ஒன்றிவிட வேண்டும் என்பதே நமது முன்னோர்களின் குறிக்கோளாக - நடைமுறை லட்சியங்களாக இருந்து வந்திருக்கின்றன.

நீதிகள் கதைகளாயின; கதைகள் - கலைகளாகி - நாடகங்களாயின. நீதி நியாயங்களை எடுத்துக் கூறாத நாடகங்களோ தெருக்கூத்துகளோ உருவாக்கப்படுவதில்லை. இராமாயணம் மகாபாரதம் போன்ற ஆன்மீக புராணக் கதைகளை - தொடர்ந்து பத்துப் பதினைந்து நாள்கள் கூத்தாகவும் நாடகங்களாகவும் நடத்துவார்கள். மிகவும் அக்கறையோடு மக்கள் கூடி ரசித்து மகிழ்வார்கள். இதன் விளைவாக மக்கள் மனதிலே நீதிகளும் நியாயங்களும் நிலைத்து நின்று வாழ்க்கையில் கலந்து பண்புகள் மேலோங்கி நின்றன.

எல்லாம் தெரிந்த கதைதானே என அலட்சியப் படுத்திவிடாமல் பின்னால் வரும் சந்ததியினருக்கு அவைகளை விளக்கும் வகையில் காட்சிகளாக - செவி வழிச் செல்வமாக விளக்க வழி வகை செய்யவேண்டும். பழைமை என ஒதுக்குதல் அறியாமைக்கு வித்திடுதல் போலாகிவிடும்.

பழமையின் பெருமையினை விளக்குதற்கு - நாமக்கல் கவிஞர் இராமலிங்கப்பிள்ளை ஒரு பாடல் எழுதியிருந்தார். ''பெற்றெடுத்த தாய் மிகப் பழசாய்ப் போனாள் என்று பிறிதொரு தாய் வேண்டுவோர் உலகிலுண்டோ? - சூரியனும் சந்திரனும் பழசாய்ப் போனால் மாற்று உண்டோ?'' என்று கேட்டுள்ளார்.

எனவே - மக்களின் வாழ்வில் ஒழுக்கம் நிலைக்க ஒற்றுமை தழைக்க - மோதல்கள் மறைந்திட நியாயங்கள் மலர்ந்திட நீதிக்கதைகளை நினைவு கொள்வோம்.

அழகிய நீர் அருவி - உயர்ந்த செங்குத்தான பாதை! அதன் உச்சியிலிருந்து - தண்ணீர் விழுந்து கொண்டிருந்தது. வற்றாத நீர் அருவியானதால் எல்லாக் காலங்களிலும் அது வழுக்குப் பாறையாகவே காட்சியளித்தது. இதனால் எவரும் பாறையின் உச்சிக்குச் செல்ல வழியில்லை. பாறையின் உச்சியிலே ஒரு பொந்து - அந்தப் பொந்திலே ஆண் பறவை ஒன்றும் பெண் பறவையொன்றுமாக அன்னப் பறவைகள் இரண்டு நெடுங்காலமாக வாழ்ந்து வந்தன. நீர் அருவியைக் கடந்து செல்லும் வேடன் ஒருவன் இந்தப் பறவைகளைப் பார்க்கும் தோறும் ''இவைகளைப் பிடிக்க வழியில்லாமற் போய்விட்டதே!'' என ஏங்குவான்.

யாராலும் தங்களுக்கு ஆபத்து நேராவண்ணம் அப்பறவைகளிரண்டும் - நிம்மதியாக வாழ்ந்து வந்தன. மழைக்காலம் வந்தது - பெருமழை பெய்தது. காற்றும் பலமாக வீசியது - இதனால் பறவைகளுக்கு ஏதும் ஆபத்தில்லை - காரணம் அந்தப் பொந்து மிகவும் பாதுகாப்பான முறையில் அமைந்திருந்தது.

மாலையில் கதிரவன், மலை வாயில் விழுந்து மறைந்த பின் - காகம் ஒன்று நனைந்து நடுங்கியவாறு - அன்னப் பட்சிகள் தங்கியிருந்த பொந்தருகே வந்து அமர்ந்தது.

இந்த காகத்தைக் கண்ட ஆண் அன்னப் பறவை ''போ! போ! நீ துஷ்டப்பறவை. உன்னால் எங்களுக்கு இடையூறு வரும். உடனே போ இங்கிருந்து'' என விரட்டியது. ''வெளியே பெருமழை பெய்கிறது காற்றும் பலமாக வீசுகிறது - இந்த நிலையில் வெளியிலே சென்றால் என் உயிருக்கு ஆபத்து ஏற்படும்! என்னால் உங்களுக்கு எந்தக் கெடுதலும் இல்லை! மழை ஓய்ந்ததும் நான் போய்விடுவேன். சிறிது நேரம் இங்கே தங்க அனுமதியுங்கள். உங்களுக்குப் புண்ணியம் உண்டு'' என்று கெஞ்சியது காகம்.

ஆண் பறவையோ அனுமதிப்பதாக இல்லை காகத்தை வெளியேற்றியே தீர வேண்டும் என்ற நோக்கத்தில் கத்திக்கொண்டேயிருந்தது.

''என்னை விரட்டிய பாபம் உங்களைச் சும்மா விடாது!... ஈவு இரக்கம் - பரிவு - பச்சாத்தாபம் எதுவு மற்ற அரக்க குணம் நரகத்தில் தான் உங்களுக்கு இடம் கொடுக்கும்'' என சபித்தது காகம்.

பெண் அன்னப் பறவையின் மனதிலே அச்சம் தலை தூக்கியது.

''நானும் நெடுநேரமாகப் பார்த்துக் கொண்டிருக் கிறேன். இந்த வேதனையான சூழ்நிலையில் அந்த காகத்தை வெளியே விரட்டுவதிலேயே குறிப்பாக இருக்கிறீர்கள். இது இங்கே தங்குவதால் நமக்கு எந்த நஷ்டமும் ஏற்படப் போவதில்லை - மழை நிற்கும் வரைதானே இது. இங்கே இருக்கப் போகிறது - இருந்து விட்டுப் போகட்டும்'' என்றது பெண்பறவை.


''எந்தக் காலகட்டத்தில் யாருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மரபு இருக்கிறது. தீயவர்களுக்கு செய்யும் உதவி தீமையைத்தான் நமக்கு அளிக்கும். நல்ல பலனைத் தராது'' என்று எடுத்துக் கூறியது ஆண் அன்னப்பறவை.

முடிவில் பெண் பறவையே வென்றது - அன்று இரவு முழுதும் மழை விட்ட பாடில்லை. காற்றும் பலமாக வீசியதால் காகம் அங்கேயே தங்கியிருந்தது - பொழுது விடிந்தது! மழை ஓய்ந்தது - காகமும் அந்த அன்னப்பறவைகளிடம் நன்றி கூறிவிட்டுப் பறந்து சென்றது.

''அந்த காகத்தினால் நமக்கு எந்தக் கேடு மில்லை; எந்த அவஸ்தையுமில்லை, பார்த்தீர்களா?'' என்றது பெண் அன்னப்பறவை.

''எனக்குத் தெரியாது! - துஷ்ட சகவாசம் பிராண சங்கடம். தீயோர் நட்பு நல்ல பலனைத் தராது என்று கூறுவார்கள்!... பெரியவர்கள் வாக்கு பொய்த்த தில்லை!'' என்றது ஆண் அன்னப் பறவை!...

இரவு முழுவதும் காகம் அங்கே தங்கியிருந்த தால் - அது எச்சமிட்டுப் போயிருந்தது - ஆலம் பழத்தை தின்றிருந்ததால் - ஆலம் விதை எச்சமாக அங்கே விழுந்திருந்தது. அந்த விதை முளைத்தது - செடியாகி மரமானது - மரத்திலிருந்து விழுது இறங்கியது - விழுது நீண்டு பூமியைத் தொட்டது. அவ்வழியே வந்த வேடன்



இதனைக் கண்டான் - விழுதை ஆட்டிப் பார்த்தான். பலமாக இருந்தது - அன்னப் பறவைகளைப் பிடிக்க வழியறியாமல் கிடந்த வேடனுக்கு வழி கிடைத்து விட்டது.

இரவு வந்ததும், நடுநிசியானதும் அங்கே வந்து அந்த விழுதினைப் பிடித்து மேலே ஏறிப்போய் - இரண்டு பறவைகளையும் பிடித்துக் கழுத்தை நெறித்துக் கூடைக்குள் போட்டான் வேடர். மரணத்தின் பிடியில் உயிர் போகும் தருணத்திலே - பெண் பறவையைப் பார்த்து ஆண் பறவை கூறியது. ''நான் அப்போதே சொன்னேனே கேட்டாயா? துஷ்ட சகவாச பிராண சங்கடம் - கெட்ட வர்கள் நமக்கு கெடுதல் செய்ய வேண்டுமென்ப தில்லை. அவர்கள் சற்று நேரம் நம்மோடு இருந்தாலே போதும் அதுவே கேடுதான்.'' என்று கூறி உயிரை விட்டது! ஆண் அன்னப்பறவை.

இது எல்லாக் காலத்துக்கும் பொருந்தும், எல்லா உயிரினத்துக்கும் பொருந்தும்!

★ ★ ★

# என்றும் பதினாறு

- பேராசிரியர் டி. செல்வராஜ்

*விளக்கு பதினாறு :* தமிழகத்தில் எழுந்தருளிய மிகப்பழைய முதல் விநாயகர் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் ஆவார். பதினாறு பேறுகளுக்கும் நாயகர், இந்தக் கற்பக விநாயகர். இதைக்குறிக்கின்ற முறையில் இவர் திருமுன் பதினாறு விளக்குகள் வரிசையாக எரிகின்றன. இவர் அருள் பேரொளியால் பக்தர்களின் வாழ்வில் இப்பதினாறு ஒளிகளையும் ஏற்றிப் பிரகாசமாக ஒளிவீசும்படி பேரருள் சுரக்கின்றார்.

## பதினாறு பேறுகள்

வாழ்வில் பல வளப்பங்களைத் தரக்கூடிய பேறுகள் - செல்வங்கள் மொத்தம் பதினாறு என்பர். அவை வருமாறு :

1. புகழ் 2. கல்வி 3. ஆற்றல் 4. வெற்றி 5. நல்ல குழந்தைகள் 6. பொன் 7. நெல் 8. அழகுடன் கூடிய இளமை 9. நல்லூழ் = நல்வினைப் பயன்கள் 10. அறிவு 11. பெருமை 12. சால்பு = நிறைவான குணங்கள் 13. துணிவு 14. வாழ்நாள் 15. ஆரோக்கியம் 16. இன்ப நுகர்ச்சி = இனிமையான அனுபவங்கள்.

பதினாறு பேறுகளில் ஒன்றோ சிலவோ, பலவோ பெற்றவர் பெறுவது நல்ல 'ஒரு வாழ்வு'. ஆனால், இறைவனது பேரருளால், அந்தப் பதினாறு பேறுகளையும் நிறைவாகப் பெற்றவர் பெறுவதோ மிக நல்ல 'பெரு வாழ்வு' எனவே, திருமண மக்களையும், பிறரையும் வாழ்த்துகின்ற சான்றோர்கள் ''பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழுங்கள்'' என்று வாழ்த்துகின்றனர்.

★★★

*எட்டின் மடங்குகள் :* ஆன்மீகத்தில் ''எட்டு'' என்பது புனிதமான, முக்கியமான எண் ஆகும். அட்ட இலக்குமி, அட்ட மங்கலம் முதலிய பல பொருள்கள் எட்டெட்டாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. பேறுகள் பதினாறு, தருமங்கள் முப்பத்திரண்டு, கலைகள் அறுபத்து நான்கு முதலிய தொகுதிப் பொருள்களும் எட்டின் மடங்குகளில் அமைந்தன. இவற்றுள் பதினாறு என்ற எண் மிக்க பெருமையுடையது.

*காளை வயது:* ஓர் ஆண் இளமைக் காலத்தைக் கடந்தவுடன், பதினாறு வயதில், காளைப்பருவத்தை அடைகின்றான். அப்போது அவனது உள்ள உணர்வுகள் பக்குவப்படுகின்றன; அறிவு முதிர்ச்சி பெறுகின்றது; உடல் வலிய கட்டமைப்புடன் திகழ்கின்றது; அவன் கல்வியில் தேர்ச்சி பெற்றுக் கலைகளில் வல்லவனாகின்றான். பழங்காலத்தில் ஆணின் திருமண வயது பதினாறு; பெண்ணின் வயது பன்னிரண்டு என்று விதிக்கப்பட்டிருந்தன.

*இளம் வயது மங்கை :* பன்னிரண்டு வயதுடைய கன்னிப்பெண்ணின் உடல் அழகு பதினாறு வயதில் கவர்ச்சியாக மாறுகிறது. பாரதியாரும், பதினாறு வயதுடைய பெண்ணை,

> *''மங்கியதோர் நிலவினிலே*
> *கனவிலிது கண்டேன்*
> *வயதுபதி னாறிருக்கும்*
> *இளவயது மங்கை''*

என்றார். எனவே, ஆணுக்கும், பெண்ணுக்கும் பதினாறு வயது என்பது உச்சநிலைச் சிறப்பானது என்பதை அறியலாம்.

ஆங்கிலத்திலும் பதின்மூன்று முதல் பத்தொன்பது வரை அமைந்த ஏழு வயதுகளை Teenage என்றும், பதினாறாம் வயதை மட்டும் Sweet Sixteen என்றும் வழங்குகின்றனர்.

★★★

*என்றும் பதினாறு :* மார்க்கண்டேயனார் என்றும் பதினாறாக - சிரஞ்சீவியாக நிலைத்து வாழ்கின்றார்.

*முத்தி :* திருக்கண்ணப்ப நாயனாரும், திருஞான சம்பந்த சுவாமிகளும் முத்தி பேறடைந்த போது அவர்களது வயது பதினாறு.

*திருப்பாற்கடல் :* தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்த போது, 1. ஆலகால நஞ்சு 2. மூதேவி 3. இலக்குமி 4. சரசுவதி 5. இந்திராணி 6. சந்திரன் 7. அரம்பையர் 8. தன்வந்திரி 9. ஐராவதம் 10. உச்சைச்சிரவம் (குதிரை) 11. காமதேனு 12. கற்பகமரம் 13. கௌத்துவ மணி 14. சிந்தாமணி 15. சங்கநிதி, பதுமநிதி 16. சுரை (பானம்) ஆகிய பதினாறும் தோன்றிய பிறகே அமுதம் பொங்கியது.

*உருத்திராக்கம் :* பதினாறு முகங்களைக் கொண்ட உருத்திராக்கம் மிகவும் மேலானது. பதினாறு உருத்திராக்க மணிகள் கோத்த மாலையைத் தோளில் அணிய வேண்டும்.

திருநீறு : தூய உடம்பின் பதினாறு இடங்களில் திருநீற்றைத்தரிக்க வேண்டும் என்று ஆன்றோர் விதித்தனர். 1. தலையுச்சி 2. நெற்றி 3. மார்பு 4. கொப்பூழ் 5, 6. முழந்தாள்கள் இரண்டு 7, 8. தோள்கள் இரண்டு 9, 10. முழங்கைகள் இரண்டு 11, 12. மணிக்கட்டுகள் இரண்டு 13, 14. விலாப்புறம் இரண்டு 15 முதுகு 16. கழுத்து.

## பதினாறு பணிவிடைகள்

சோடசோபசாரம் : சோடச = பதினாறு ; உபசாரம் = உபசரித்தல்; பணிவிடை செய்தல்

தெய்வத்தைச் சிலை வடிவில் வழிபடுகின்ற போது அதற்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளில் மிகவும் முக்கியமானவை பதினாறு ஆகும். 1. ஆவாகனம் 2. ஸ்தாபனம் 3. சந்நிதானம் 4. சந்நிரோதனம் 5. அவகுண்டனம் 6. அபிடேகம் 7. பாத்யம் 8. ஆசமனியம் 9. அர்க்கியம் 10. மாலை சார்த்தல் 11. தூபம் 12. தீபம் 13. நைவேத்தியம் 14. பாநீயம் 15. ஜபம் 16. தீப ஆராதனை.

தீப ஆராதனை : தீப ஆராதனைகளும் பதினாறு வகைப்படும் 1. தூபம் 2. புஷ்ப தீபம் 3. நாக தீபம் 4. விருஷப தீபம் 5. மேரு தீபம் 6. புருஷாமிருக தீபம் 7. கும்பதீகம் 8. ஆராத்திரிகம் 9. நட்சத்திரதீபம் 10. கற்பூரதீபம் 11. பஸ்மோபசாரம் 12. கண்ணாடி காட்டல் 13. குடை பிடித்தல் 14. கொடி காட்டல் 15. சாமரம் வீசுதல் 16. விசிறி வீசுதல்.

### மேலும் சில பதினாறுகள்

1. சந்திரனின் கலைகள் பதினாறு
2. விலா எலும்புகள் பதினாறு. வாயில் மேல் வரிசையில் பதினாறு பற்களும் இருக்கின்றன.
3. இறந்தவருக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகள் பதினாறாம் நாளில் நிறைவு பெறுகின்றன.
4. அவதானம் = நினைவாற்றல், ஒரே சமயத்தில் பதினாறு காரியங்களை நினைவாற்றலுடன் நிறைவேற்றுவதைச் சோடச அவதானம் என்பர்.
5. ''தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயுமாம்'' - எட்டும், பதினாறும் பழமொழியிலும் உள்ளன.
6. கந்தர் சஷ்டி கவசத்தைச் சிந்தை கலங்காமல் தியானிப்பவர்கள் - ஒரு நாளைக்கு. முப்பத்தாறு முறை பாராயணம் செய்பவர்கள் ''எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்'' (அடி எண். 214) அதாவது, கவசம் முதலிய பக்திப்பாடல்களைப்படித்தும், பயின்றும், பாராயணமும் செய்தால், வயது முதிர்ந்தாலும், உடல் தளர்ந்தாலும் உள்ளம் என்றும் இளமையாய் என்றும் பதினாறாய் விளங்கும் என்பது கருத்து.

★★★

## பதினாறு பேறுகள் வேண்டுதல் பாடல்கள்

பதினாறு பேறுகளை, ஒரு தனிப்பாடலில், காளமேகப்புலவர், மதுரைச் சொக்க நாதரிடம் வேண்டுகின்றார் :-

''துதிவாணி வீரம் விசயம்சந்
தானம் துணிவுதனம்
மதிதா னியம்சவு பாக்கியம்
போகம் அறிவழகு
புதிதாம் பெருமை அறம்குலம்
நோயகல் பூண்வயது
பதினாறு பேறும் தருவாய்
மதுரைப் பராபரனே.

பொழிப்புரை : அடி எண் (4) மதுரையில் வீற்றிருக்கின்ற சொக்க நாதப் பெருமானே! அடி எண் (1) 1. துதி = புகழ்; 2. வாணி = கல்வி; 3. வீரம் 4. விசயம் = வெற்றி 5. சந்தானம் = நல்ல குழந்தைகள்; பரம்பரை. 6. துணிவு 7. தனம் = செல்வங்கள்

அடி எண் (2) 8. மதிதானியம் = தானியங்களில் சிறப்பாக மதிக்கப்படுகின்ற நெல் 9. சவுபாக்கியம் = மேலான சுகம் 10. போகம் = இன்ப அனுபவங்கள், நுகர்ச்சி 11. அறிவு 12. அழகு.

அடி எண் (3) 13 புதிதாம் பெருமை = புதிது புதிதாகத் தோன்றக் கூடிய பெருமைகள் 14 அறம் குலம் = அறச்சிந்தனையுடைய குடிப்பிறப்பு 15 நோயகல் = நோயில்லாமை; ஆரோக்கியம் 16 பூண் வயது = நீண்ட ஆயுள் ஆகிய

அடி எண் (4) பதினாறு பேறுகளையும் எனக்கு முழுமையாக அருள்வாய்.

★★★

## அபிராமிப்பட்டர்

அவர் விரும்பிய பதினாறு பேறுகளைத்
திருக்கடவூர் அபிராமியம்மையிடம்
வேண்டுகிறார்

கலையாத கல்வியும், குறையாத வயதும், ஓர்
கபடுவா ராத நட்பும்,
கன்றாத வளமையும், குன்றாத இளமையும்,
கழுபிணியிலாத உடம்பும்.

# வாழ்வில் வெற்றிபெற நல்ல நூல்கள் பயிலுதல் வேண்டும்

– வி.என்.சி. குமார், பவானி

நல்ல நூல்களே ஒரு மனிதனுக்கு நல்ல நண்பன்.

நல்ல நூல்களைப் படிப்பதால் நாம் வாழ்வில் உயர்வு அடைவது நிச்சயம்.

நல்ல வரலாறு நூல்களைப் படிப்பதால் ஒரு மனிதன் சரித்திரத் தேர்ச்சி பெறுகிறான்.

நல்ல காவிய நூல்களைப் படிப்பதினால் ஒரு மனிதன் வீரமுள்ளவன் ஆகின்றான்.

நல்ல தத்துவ நூல்களைப் படிப்பதினால் ஒரு மனிதன் ஆழ்ந்த சிந்தனைவாதி ஆகின்றான்.

நல்ல நீதி நூல்களைப் படிப்பதினால் ஒரு மனிதன் நேர்மை உடையவன் ஆகின்றான்.

நல்ல தரமான இலக்கிய நூல்களைப் படிப்பதினால் ஒரு மனிதன் சிறந்த இலக்கியவாதி ஆகின்றான்.

இவை அனைத்தையும் படித்துப் பழகி வந்தால் ஒரு மனிதன் வாழ்வில் முழு வெற்றி காண முடியும்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு.

– திருக்குறள்

*சலியாத மனமும், அன்பகலாத மனைவியும்,*
*தவறாத சந்தா னமும்,*

*தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்,*

*தடைகள் வாராத கொடையும்,*

*தொலையாத நிதியமும், கோணாத கோலும்,*
*ஒருதுன்பமில் லாத வாழ்வும்,*
*துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய*
*தொண்டரொடு கூட்டு கண்டாய்.*

*அலையாழி அறிதுயில் மாயனது தங்கையே!*
*ஆதிகட வூரின் வாழ்வே!*
*அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!*
*அருள்வாமி! அபிராமி யே.''*

அபிராமி அம்மை பதிகம்

பொழிப்புரை அடி எண் (4) அலைகள் வீசுகின்ற திருப்பாற்கடலில் அறிதுயில் செய்கின்ற நாராயணனின் தங்கையே! தொன்மை மிக்க திருக் கடவூரின் வாழ்வே! அர்த்தநாரீசுவரின் இடப்பாகத்தில், நிலைத்து உறைகின்ற கிளியை ஏந்திய திருக் கையை உடையவளே! அருள்வாமியே! அபிராமியே!

அடி எண் (1) 1. குழப்பமில்லாத கல்வி 2. குறைவில்லாத நீண்ட வயது 3. கவடு - வஞ்சனை இல்லாத நட்பு 4. வாடாத வளமை 5. குறைவில்லாத இளமை 6 அதிகமான பிணிகள் நிறைந்து பிணிக்காத உடம்பு

அடி எண் (2) 7. தளராத மனம் 8. அன்பு சுற்றும் குறையாத மனைவி 9. நீதி நெறி வழுவாத பரம்பரை 10. குறையாத நிறைந்த புகழ் 11. தவறாத வாக்கு 12. இடையூறு இல்லாத கொடை.

அடி எண் (3) 13 அள்ளக்குறையாத செல்வம் 14 வளையாத செங்கோல், (நிலைகுலையாத ஆளுமை) 15 ஒரு துன்பமும் இல்லாத வாழ்வு 16 தூய்மையான உன் திருவடிகளின் மீது கொண்ட பக்தி ஆகிய பதினாறையும் நீ எனக்கு அருளி, சிறந்த உன் தொண்டர் களுடன் என்னையும் சேர்த்தருள்வாய்.

***

# திருவான்மியூர் மருந்தீசுவரர்

- திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன்

''விரையார் கொன்றையினாய் விடமுண்ட
மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கை யொர்பங்கு
திரையார் தென்கடல்சூழ் திருவான்மி யூருறையும்
அரையா வுன்னையல்லா லடையாதென தாதரவே''

என்று திருஞானசம்பந்தர் இத்திருத்தலத்து ஈசனைப் பாடிப்போற்றுகின்றார்!

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும்
சுருதிகளின்
பணையும் பதிகொண்ட வேரும்பனி மலர்ப்பூங்
கணையும் பாசாங் குசமும் கையில்
அணையும் 'திரிபுர சுந்தரி' ஆவது அறிந்தனமே!

என்கிறது அபிராமி அந்தாதி.

அன்னை திரிபுரசுந்தரி உடனுறை மருந்தீசுவரர் திருக்கோயில் சென்னையைச் சார்ந்த திருவான்மியூரில் கிழக்குக் கடற்கரை சாலையில் அமைந்துள்ளது. முன்பு ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தின் உட்பிரிவான புலியூர்க் கோட்டத்தில் உள்ள கோட்டூர் நாட்டில் தேவ தானமாக திருவான்மியூர் விளங்கியதாக தெரிகிறது. மிகவும் புராதனப் பழமை வாய்ந்த இத்திருக்கோயில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடப்பட்டுள்ளது.

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே

என்று முதுமைவரை காத்திராமல் இளமையிலேயே விரைந்து வழிபட வேண்டும் என்று மிகவும் விழைந்து இறைவனை வணங்கச் சொல்லி திருநாவுக்கரசர் போற்றிப் பாடியிருக்கிறார்.

வான்மீகி முனிவரின் வேண்டுதலுக்கிணங்க இவ்வூர் ஈசன் எழுந்தருளியதால் இவ்வூருக்கு திருவான்மி யூர் என்ற நாமம் ஏற்பட்டுள்ளது.

வான்மீகி முனிவரில் தொடங்க இன்றுவரை ஆன்மீகத்தில் சிறந்து விளங்கும் பக்தர்களையும் சித்தர்களையும் கண்டது இவ்வூர்.

இத்திருக்கோயிலின் கிழக்கு மேற்கு வாயில்களின் மீது ஐந்து நிலைகளும் ஏழு கலசங்களும் உடைய கோபுரங்கள் உள்ளன. மிகவும் உயர்ந்து இக்கோபுரங்கள், பல நிலைகள். சாளரங்கள், தூண்கள், சிற்பங்கள், கலசங்கள் ஆகியவற்றுடன் அழகையும் தெய்வீக உணர்வையும், கம்பீரத்தையும் வெளிப்படுத்துகின்றன.

இவ்வுயர்ந்த கோபுரங்களின் பெருமையை சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தில் கூறியிருக்கிறார். திருஞானசம்பந்தர் திருவான்மியூர் சென்றடைந்ததைப் பாடுங்கால், திருவான்மியூரில் உள்ள சிவனடியார்கள் சம்பந்தரை வரவேற்ற காட்சியைப் பாடியிருக்கிறார்.

திருவான்மியூர் மன்னும் திருத்தொண்டர் சிறப்பெதிர
வருவார் மங்கல அணிகள் மறுகுநிரைத்
தெதிர்கொள்ள
அருகாக இழிந்தருளி அவர் வணங்கத் தொழுதன்பு
தருவார்தங் கோயில்மணித் தடநெடுங்கோபுரம்
சார்ந்தார்

திருநாவுக்கரசர் திருவான்மியூர் சென்று பிணிகளுக்கு மருந்து போன்ற ஈசனை அன்புடன் வழிபட்டுப் பல உண்மைகளை வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடினார் என்றும், பின் அவர் பிறப்பை நீக்கி நிலையான இன்பம் அருளும் ஈசனைப் பல பதிகளில் வழிபட்டவாறு நறுமணம் கமழும் மலர்களையுடைய சோலைகள் நிரம்பியுள்ள திருமயிலைப் பதியை அடைந்தார் என்றும் சேக்கிழார் கூறியிருக்கிறார்.

திருவான்மி யூர்மருந்தைச் சேர்ந்து பணிந்து
அன்பினோடும்
பெருவாய்மைத் தமிழ்பாடி அம்மருங்கு பிறப்பறுத்துத்
தருவார்தங் கோயில்பல சாத்திறைஞ்சித்
தமிழ்வேந்தர்
மருவாரும் மலர்ச்சோலை மயிலாப்பூர்
வந்தடைந்தார்

அருணகிரிநாதர் தம் திருப்புகழில்

''மணிமாளிகை மாடமுயர்
திருவான்மி யூர்மருவு பெருமானே!''

என்று வானத்தைத் தொடுமளவு மாட மாளிகைகள் உயர்ந்துள்ள திருவான்மியூரில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானே என்று போற்றிப்பாடியுள்ளார்.

இக்கோயிலில் கிழக்கு கோபுரத்தை வணங்கி உள்ளே நுழைந்ததும் விஜய கணபதி சன்னிதியும் முருகப் பெருமான் சன்னிதியும் தனித்தனியாக முன் மண்டபத்துடன் இணைந்துள்ளது. இங்கு வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளியுள்ள முருகனை வழிபட்டே அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

தியாகர் சன்னிதி உள்ள தியாகராஜர் சபா மண்டபத்தினுள் தியாகராஜர், அம்மன், தனியம்மன் ஆகிய உற்சவ மூர்த்திகள் உள்ளன. இச்சன்னிதியின் முன்புறம் வலப்பகுதியில் கமல விநாயகரும் அருகே உள்ள தூண்களில் ஆஞ்சநேயரும் அவருக்கு எதிராக தண்டாயுதபாணியும் காட்சித்தருகின்றனர். ஆஞ்சனேயருக்கு ராம நாமம் எழுதி வந்து மாலையாக அணிவித்து பக்தர்கள் வழிபடுகிறார்கள். வியாழன் சனிக்கிழமைகளில் வடைமாலை, வெண்ணெய் சாற்றி மகிழ்கிறார்கள்.

தியாகர் மண்டபத்தின் உள்ளாகத்தான் சிவ பிரானின் சன்னிதிக்குச் செல்ல வேண்டும். இம் மண்டபத்தின் தெற்குப் பகுதியில் விநாயகருடன் துவங்கி அனைத்து நாயன்மார்களும், தொகையடியார்களும் முறையாக வரிசையில் இடம் பெற்றுள்ளனர்.

அடுத்து கஜலட்சுமி மலர்ச்செண்டை ஏந்திய வாறு அமர்ந்துள்ளார். இதனை அடுத்து வீரவாகு, அருணகிரிநாதர் இருவரும் இருபுறமும் தோன்ற தேவியருடன் முத்துக்குமாரசுவாமி காட்சியளிக்கிறார்.

இத்திருத்தலத்தின் ஈசுவரர் மருந்தீசுவரர்; முருகன் முத்துக்குமார சுவாமி. தெற்கே வைத்தீசுவரர் திருக்கோயிலில் உள்ள முருகப்பெருமானின் பெயரும் முத்துக்குமாரசுவாமி. வைத்தியம் என்றால் மருத்துவம் மருந்து அளிப்பவர் மருத்துவர். அங்கே மருந்தாவது மண். இங்கே மருந்தாவது பால்.

வடக்கில் உற்சவ திருமேனிகள் அனைத்தும் மிகவும் பொலிவுடன் தோற்றமளிக்கின்றன. இதில் பிரம்மா மஹாவிஷ்ணு, லட்சுமி, சிவன், பார்வதி திருக்கல்யாண உற்சவ திருமேனிகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. திருமணத்திற்கு அம்மனை தாரை வார்த்துக் கொடுக்க விஷ்ணு கையில் கிண்டியுடன் தோற்றமளிக்கும் காட்சி மிகவும் அற்புதமாக இருக்கும்.

அடுத்து சபையில் நடராசர், சிவகாமி அம்மையாருடன் உலோகத் திருமேனியில் காட்சியளிக்கிறார். சபையை அடுத்து 108 சிவலிங்கங்கள் 12 வரிசைகளில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியின் இறுதியில் மூன்று கண்களுடன் சூலம், உடுக்கை, சர்பம் ஆகிய வற்றை கரங்களில் ஏந்தியவாறு காலபைரவர் காட்சியளிக்கிறார். பைரவருக்குரிய நாய்வாகனம் இங்கு இடம்பெறவில்லை. ஈசன் ஞான மூர்த்தியான பைரவரைத் தோற்றுவித்து அசுரர்களை ஒடுக்கினார். உயிர்களைக் கவரும் காலனுக்கே இவர் காலனாக விளங்குவதால் இவரைக் கால பைரவர் எனக் குறிப்பிடுகின்றனர்.

இம்மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் பஞ்ச லிங்கங்கள் உள்ளன. இவற்றுள் முதலாவதாக நிறுவப் பெற்றுள்ள பெரிய அளவில் உள்ள சிவலிங்கமாகிய கேதாரீசுவரரை தீபாவளி காலத்தில் கேதார கௌரி நோன்பு இருப்பவர்கள் வந்து பூசிப்பது வழக்கம்.

அண்ணாமலையாரும் உண்ணாமுலை அம்மையும் இப்பகுதியில் உள்ளனர். இவ்வரிசையின் இறுதியில் சூரியபகவான் நின்ற கோலத்தில் காட்சி கொடுக்கிறார். பொதுவாக மூலக்கோயிலில், மகா மண்டப நுழைவாயிலின் இருபுறங்களிலும் சூரியன், சந்திரன் ஆகிய உருவங்கள் நிறுவுவது வழக்கம். இவ்வாலயத்தில் சூரியனின் உருவம் மட்டும் தென்கிழக்கு மூலையில் அமைக்கப்பட்டு உள்ளது. இக்கோயிலில் நவக்கிரஹங்களுக்கு சன்னிதி அமைக்கப்படவில்லை. சுயம்பு மூர்த்தியாய் மருந்தீசுவரர் இருப்பதால் நவக்கிரஹங்களின் கடமையை அவரே நிறைவேற்றுவதால் அவற்றை அமைக்கவில்லை என ஒரு கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

கருவறையின் வடக்கு கோஷ்டத்தில் முதலாவதாக துர்க்கையம்மன் காட்சி தருகிறார். செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் கூடைகூடையாக எலுமிச்சம் பழ மூடிகள் இங்கே குவிந்துகிடக்கும். மகளிர் தங்கள் வாழ்வை குறைகள் நீக்கி செழிக்கவைக்குமாறு ஸ்ரீதுர்க்கையம்மனிடம் வேண்டிக் கொண்டு எலுமிச்சம்பழ மூடியில் நெய் ஊற்றி (சாற்றை பிழிந்து பின் மூடியைக் கிழித்து கிண்ணம்போல் ஆக்கி) தீபம் ஏற்றுகிறார்கள்.

அருகே தியானத்தில் அமர்ந்து இருக்கிறார் சண்டேசுவரர். அடுத்து கோஷ்டத்தில் நான்முகன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார்.

கிழக்கு நோக்கியுள்ள கோஷ்டத்தில் சங்கு சக்கரத்தை ஏந்தியவாறு திருமால் பக்தர்களுக்கு காட்சியளிக்கிறார்.

தென் திசையில் தென்புற கோஷ்டத்தில் தென் முகக் கடவுள் தட்சிணாமூர்த்தியை தரிசிக்கலாம். ஆன்மாக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய யோகத்தின் வடிவாக விளங்குபவர் தட்சிணாமூர்த்தியாவார். ஜடா முடி ஞான நோக்கையும், உடுக்கை படைக்கும் தொழிலையும், வீராசனம் ஈடு இணையற்ற தன்மை

யையும் உணர்த்துகின்றன. வீராசனத்தில் அமர்ந் திருக்கும் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி நமக்கு பூரண நலம் தருவார்.

பொதுவாக நாம் நேராக பார்க்கும் போது சரியாக தெரியாத பொருட்கள், குனிந்து ஒரு புறமாய் பாரிக்கும் போது குறிப்பாக நன்றாகத் தெரியும். நமது பார்வை குறிப்பிட்ட இடத்தில் இருப்பதால் அவ்விடத் தில் உள்ள பொருட்கள் நம் பார்வைக்கு நன்றாக புலப்படுகிறது. அதுபோல் குருதட்சிணாமூர்த்தி சுவாமி இங்கே சிறிது சாய்வாக ஒரு பக்கமாக பார்க்கிறார். அந்த சன்னிதிமுன் அமர்ந்தோ, நின்றோ நாம் பார்த்தால் அவர் நம்மை பார்ப்பதுபோல் தோன்றும். குரு பார்க்க கோடி நன்மையன்றோ? அத்துணை நலங்களையும் நமக்கு அளிப்பவர் தட்சிணாமூர்த்தி பகவான். வியாழக் கிழமைகளில் குருவுக்கு சந்தனக்காப்பு சாற்றப்பட்டு, கொண்டகடலை மாலையும் சாற்றப்படுகிறது.

இச்சன்னிதியில் அமர்ந்து தியானம் செய்பவர் கள். குருபகவானுக்கு அர்ச்சனை ஆராதனை செய்பவர் கள் அறிவாளிகளாகவும் படிப்பாளிகளாகவும் பட்டம், பதவி பரிசு எல்லாம் பெறுபவர்களாகவும் திகழ் கின்றனர்.

இச்சன்னிதியில் அமர்ந்து கொண்டு பக்தர்கள் குருவையே குருவாகக் கொண்டு குருமந்திரத்தைச் சொல்லி தியானம் செய்கிறார்கள்.

''வ்ருஷப த்வஜாய வித்மஹே
க்ருணி ஹஸ்தாய தீ மஹி
தந்நோ குருப்ரஸோதயாத்''

என்னும் குரு காயத்ரியை அனைவரும் சொல்லி தியானித்து வழிபட்டு நல்ல வழிபாட்டுப் பலனையும் பெறலாம்.

அடுத்து நர்த்தன விநாயகரை வழிபடலாம்.

சுவாமி சன்னிதியை வலம்வந்து பின்னர் தியாகர் மண்டபம் வழியே வெளியே வந்து பிரகார வலம் வரும்போது கொடிமரத்தைக் காணலாம். பின்னர் இங்கிருந்து வலம் வரும் வழியில் வடமேற்கு மூலையில் உள்ள வன்னி மரத்தைக் (தலவிருட்சம்) காணலாம்.

காடாக இருந்த இடத்தை மக்கள் வசிக்கும் நாடாக மாற்றும்போது அவ்விடத்தில் இருக்கும் மரங்களில் ஒன்றை தலவிருட்சமாக திருக்கோயில் களில் கொள்வது வழக்கம். இங்கே உள்ள வன்னி மரத்தடியில் தான் ஈசன் அகத்தியருக்கு திருமணக் காட்சியளித்திருக்கிறார் என்றும் வான்மீகி முனிவர் வன்னிய மரத்தடியில்தான் சுயம்புலிங்கத்தைக் கண் டெடுத்து வழிபட்டார் என்றும் வரலாறு கூறப்படு கின்றது.

அடுத்து வலம்வந்து ஸ்ரீ அம்பாள் சன்னிதியை அடையலாம். அம்பாள் சன்னிதி கருவறை, முன் மண்டபம் வெளி மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு தனிப்பிரகாரமாக இருக்கிறது. அம்பாள் கருவறையில் அருள்மிகு திரிபுர சுந்தரி நான்கு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறார். அம்பாள் சன்னிதிக்கு முன்னர் சிம்ம வாகனமுள்ளது. அதனருகே ஸ்ரீசக்கரமும் நிறுவப்பட்டுள்ளது. மண்டபத்தின் கிழக்குப் பகுதியில் உற்சவரான சுக்கிரவார அம்மன் காட்சித் தருகிறார்.

வெளிமண்டபத்தில் தூண்களில் தவம் புரியும் காமாட்சியம்மன், சரபேசுவரர். நரசிம்மர், குபேரர் மற்றும் சடநடசித்தர் ஆகியோர் பக்தர்களுக்கு காட்சி யளிக்கின்றனர்.

இங்கு சரபேசுவரருக்கு ஞாயிற்றுக்கிழமை களில் (இராகு கால நேரமான மாலை 4-30 மணிமுதல் 6 மணி வரை) சிறப்பு ஆராதனை நடைபெறுகிறது. பக்தர்கள் ஸ்ரீசரபரை வழிபட்டும் வழிபட்டவர்களுக்கு பிரசாதங்கள் வழங்கியும் மகிழ்கிறார்கள்.

வெளிப்பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் மூன்று விநாயகர் சன்னிதி உள்ளது. அதை அடுத்து வேதாகம பாடசாலை ஒன்று உள்ளது. இங்கே சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வேதாகம முறைப் படி வேதம் பயில்கிறார்கள்.

இதே வரிசையில் மருந்தீசுவரர் தேவாசிரியன் திருமுறை மண்டபம் உள்ளது. இங்கே திருமுறை சொற்பொழிவுகள், விளக்கவுரை, முற்றோதல்கள், இசை நிகழ்ச்சிகள் முதலியன தினந்தோறும் நடக் கின்றன. இந்நிகழ்ச்சிகளால் இத்திருக் கோயிலுக்கு வரும் பக்தர்களின் மனம் பரவசத்தில் மகிழ்ச்சியில் நெகழ்ச்சியடைகிறது.

இதனை அடுத்துள்ள மண்டபத்தில் பசுக்கள் கட்டப்பட்டு நன்றாக பராமரிக்கப்பட்டு வருகிறது. பக்தர்களுக்கு 'கோ' தரிசனம் செய்வதிலும் 'கோ' பூசை செய்வதிலும் பெரு மகிழ்ச்சி கிடைக்கிறது.

கிழக்குகோபுரவாயிலுக்கு வெளியே சித்திரைக் குளமும் அதன் கரையில் இராமநாதர் சன்னிதியும் உள்ளது.

இத்திருத்தலத்தில் பிறந்தாலும், இருந்தாலும், இறந்தாலும், வந்து கண்ணால் கண்டாலும், மனதார நினைத்தாலும் வீடுபேறு அடைவார்கள் என்று இத் திருக்கோயில் தலபுராணம் கூறுகிறது.

இத்திருத்தலத்திற்கு ஜென்மநாசினி, காமநாசினி, பாபநாசினி, ஞானதாயினி, மோட்சதாயினி என்ற ஐந்து தீர்த்தங்கள் சிறப்பை சேர்க்கின்றன. சூரியன்,

## தேங்காய் உடைப்பது ஏன்?

*ஆன்மாக்களிடம் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் உள்ளன. தேங்காயின் மேலுள்ள பச்சை மட்டை மாயாமலம்; உரித்து எடுக்கின்ற நார் கன்ம மலம்; உடைத்து அகற்றும் ஓடு ஆணவ மலம். இந்த மும்மலங்களும் அகன்றால் சுத்தசித்தி என்ற வெண்மையான பருப்பு தோன்றுகிறது.*

**– அருளரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்**

பிரம்மா, யமன், பார்த்தசாரதி, இந்திரன், இராமர், சந்திரன் ஆகியோர் இந்த தீர்த்தங்களில் நீராடி சிவபூசை செய்து பாவவிமோசனம் பெற்றனர் என்று தலபுராணம் விவரிக்கிறது.

மூலவர் மருந்தீசுவரர் தாமாகவே உதித்த சுயம்பு லிங்கம். இத்தலம் தேவ முனிவர்கள் மூலம் பிரம்மா வால் வேதாகம முறைப்படி அமைக்கப்பெற்றது. இத்திருக்கோயிலுக்கு பிரம்மாவே மாடவீதி, மாட மாளிகைகள், கூடகோபுரங்கள் திருத்தேர் மற்றும் உற்சவ விக்ரஹங்கள் எல்லாம் அமைத்து பங்குனி மாதத்தில் ஆண்டுப்பெருவிழா (பிரம்மோற்சவம்) செய்து இறைவனை வழிபட்டார் என்று தலபுராணத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விறைவனின் திருமேனியில் காமதேனு வின் கால் குளம்பு பட்ட வடு சிரசில் காணப்படுகிறது. இறைவனின் திருமேனி தினந்தோறும் காமதேனு பால் சுரந்ததால் பால் வண்ணத்தில் உள்ளது. இவ் வாலய பெருமானுக்கு பால் வண்ண நாதர் என்ற பெயரும் உண்டு. வான்மீகி வழிபட்டதால் வான்மீகி நாதர் என்ற பெயரும். அகத்தியருக்கு மருந்து அளித்த தால் மருந்தீசுவரர் என்ற பெயரும் இப்பெருமானுக்கு கிடைக்கப்பெற்றது.

காசிப முனிவரின் சாபத்தால் புனிதத்தன்மை இழந்த காமதேனு, மருந்தீசுவரர் திருமேனியின் மீது தினம் பால் சொரிந்து பாவ விமோசனம் அடைந்தது என்பது இங்கே குறிப்பிடத்தகுந்தது.

இராட்சசு என்ற வானரன், பாரதப்போர் முடித்த பார்த்தசாரதி, சந்திரன், இந்திரன் போன்றோர்கள் அவர்கள் செய்த பாவத்தால் ஏற்பட்ட பாவங்களை இத்தலத்திலுள்ள புண்ணிய நீர்களில் நீராடியதால் போக்கிக்கொண்டனர். இது ஒரு பாவ விமோசனம் தரும் தலமாகும். இங்கே ஸ்ரீராமர் வரம்பெற வேண்டி சிவ பூசை செய்திருக்கிறார்.

சூரியபகவானுக்கு அருள்புரியும் வண்ணம் மருந்தீசுவரர் பெருமான் இத்திருத்தலத்தில் மேற்கு நோக்கி வீற்றிருக்கிறார்.

இத்திருக்கோயிலின் சுவர்களிலெல்லாம் இறைவனின் பக்திப்பாடல்கள் எழுதப்பட்டிருக் கின்றன. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம், திருநாவுக்கரசரின் திருக்குறுந்தொகை, மாணிக்க வாசகரின் சிவபுராணம், பாம்பன் சுவாமிகள் எழுதிய அட்டாட்ட விக்ரகலீலை, சன்முகக்கவசம், குமாரஸ்து வம், அபிராமி பட்டர் எழுதிய அபிராமி அந்தாதி, லலிதா சகஸ்ரநாம நாமாவளி போன்ற திருப்பாடல்கள் பக்தர்களின் மனதை இறைவனிடத்தில் இழுத்துச் செல்கிறது.

இந்துசமய அறநிலையத்துறையினரால் மிகவும் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வரும் இத்திருக்கோயிலில் திருவிழாக்கள் நடத்த ஆலய நிருவாகத்தினருடன் பக்தர்கள் கொண்ட விழாக்குழுக்களும் உதவுகின்றன.

இங்கே மாத சஷ்டி விழா ஆடி, தை வெள்ளிக் கிழமைகளில் விளக்கு பூசை சுக்கிரவார அம்மன் ஊர்வலம், பிரதோஷ விழா, ஞாயிற்றுக்கிழமைகளில் சரப வழிபாடு மற்றும் தட்டு பூசை வழிபாடு போன்ற பல விழாக்கள் சிறப்புற நடைபெறுகின்றன.

இத்தலத்தில் அருள்மிகு தியாகராசர் உலோகத் திருமேனி புகழ்பெற்று விளங்குகிறது. பௌர்ணமி நாட்களிலும் மற்றும் சிறப்பு நாட்களிலும் அருள்மிகு தியாகராசர் திருவீதியுலா மற்றும் திருநடனக் காட்சிகள் மிகவும் சிறப்பாக நடைபெறும்.


பங்குனி மாதத்தில் நடைபெறும் பிரம்மோற் சவம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. தொன்மை காலந் தொட்டு நடைபெற்று வருகிறது.

அக்காலத்திலும் இக்காலத்திலும் பக்தர்களுக் கும் முனிவர்களுக்கும், ஞானிகளுக்கும், சித்தர் களுக்கும் முக்கியத்தலமாக திருவான்மியூர் இருந்து கொண்டிருக்கிறது.

★★★

# அன்னை மீனாட்சி

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்



அன்னைநீ அன்னமிட
அவனிஎல்லாம் உயிர்வாழும்.

அன்பின்றிச் சிவம்இல்லை,
சிவம்இன்றி அன்பில்லை,
பெண்இன்றி ஆணில்லை,
ஆண்இன்றிப் பெண்இல்லை,
ஒன்றுக்குள் இரண்டாகி,
ஒருமையிலே நிலையாகி,
என்மனத்தின் இடைவெளியில்,
இயங்கிவரும் ஆத்மாவால்,
என்மனத்தால் இறைவழியை,
எட்டிப்பார்க்க இடமளித்து,
அன்று இன்று நாளைஎன்று,
அடிப்படையில் ஒன்றேஎன்று,
அன்னை ஒன்றே என்றும்உள்ள,
ஆக்கும்சக்தி ஆகிநின்று,
இன்னல்நீக்கி இறைநெறியை,
இவ்வுலகோர் உணரவைத்தாய்,

எண்எழுத்தை அறியவைத்தாய்,
எழுதிவைத்தேன் உன்புகழை,
பண்ணமுதம் நீதந்தாய்,
பாமாலை தொடுத்துவைத்தேன்,
கண்ணொளியில் கலந்துநின்றாய்,
காண்பதெலாம் உன்உருவம்,
என்னதென்று எதுவுமில்லை,
எல்லாம்உன் உடைமையம்மா,
எண்ணங்கள் சிதறாமல்,
இருக்கும்நிலை எய்திவிட்டே,
கண்மூடித் தியானித்தேன்,
கண்முன்னே வந்துநின்று,
என்னுள்ளே நீவந்தாய்,
இனிஎந்தக் குறையுமின்றி
கண்கொள்ளாக் காட்சிதந்தாய்
கண்கண்ட தெய்வம்நீயே.

அன்னையே, நான் என்றதுமே,
அமுதுஊறும் என்நாவில்,
அன்னைஉன் அன்புருவம்,
அகக்கண்முன் வந்து நிற்கும்,
அன்னைஉன் அரவணைப்பில்
அங்கமெல்லாம் கசிந்துநிற்கும்,
கன்னலதின் இன்சுவையும்
கறந்தபாலின் மென்சுவையும்,
இன்னமுதாய் உன்நாமம்,
இனித்துநிற்கும் என்நாவில்,
இன்னமுதம் நீஅளித்தே
இவ்வுயிரை வாழவைப்பாய்,
அன்னமின்றி உடலுயிரும்,
அவனியிலே ஏதம்மா?

★★★

# சந்தோஷிமாதா

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

அகிலம் யாவும் அன்னையின் அருளாலேயே வாழ்கின்றது! அன்னை உலகைக்காக்கப்பல்வேறு வடிவங்கள் எடுத்து இரட்சிக்கிறாள்.

மதுரையில் மீனாட்சியாக, காஞ்சியில் காமாட்சி யாக, காசியில் விசாலாட்சியாக அருள் பாலிப்பதுடன் திருக்கடவூரில் அபிராமியாகி, திருமயிலையில் கற்பகாம் பாள் ஆகி தலங்கள் தோறும் ஒவ்வொரு திருநாமம் பெற்றுவிளங்குகிறாள். இவற்றோடு, தன் அருள்பெற்ற சில குழந்தைகளையும் அவள் பிறக்கச் செய்து அருள் பாலிக்கிறாள்!

உமாதேவியான பரமேச்வரி, இலட்சுமி, ஸரஸ்வதி இந்த மூன்று தெய்வங்களின் மகளாகத் தோன்றியவள்தான் தேவி சந்தோஷிமாதா!

தன்னைத் தொழுபவர்களை சந்தோஷமாக வைப்பவள் ஆதலால் அவளுக்கு முத்தேவியும் ஐங்கர னும், அந்தப் பெயரைச் சூட்டினார்கள்!

சந்தோஷிமாதா குலமங்கையர் தொழவேண்டிய குல விளக்கு! விரத மகிமையை உலகிற்கு உணர்த்திய இவள் வெற்றித்தெய்வமாகும்!

இந்தத் தெய்வத்தாயின் கதை புனிதமானது! எல்லோருக்கும், முக்கியமாகப் பெண்களுக்கு வரப் பிரசாதம் போன்றது. அதனை அறிந்து அந்தத் தெய்வத் தாயைப் போற்றி வெள்ளிக்கிழமை விரதமிருந்தால் எல்லோரும் பெருவாழ்வு பெறலாம். பெருமை மிக்க சந்தோஷி மாதாவின் வரலாற்றை இனி காண்போம்!

## சந்தோஷி மாதா வரலாறு

ஆவணி மாதம் - பௌர்ணமி நன்னாள், வட தேச மெங்கும், தங்கள் சகோதரர்களுக்கு சகல மங்கலங் களும் உண்டாகவேண்டும் என்று, சகோதரிகள் ரட்சை களைக் கட்டும் 'ரட்சாபந்தனம்' பெருவிழா நடக்கிறது!

ஒவ்வொரு வீட்டிலும் குதூகலம்; ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஆனந்தம்!

மண்ணுலகில் இவ்விழா இவ்வாறு நடந்து கொண்டிருக்கும் வேளையில் விண்ணுலகில் கைலை மலையில், விநாயகப்பெருமான் தம் இடத்தில் அமர்ந் திருக்கிறார். அவர் அருளால் சித்திக்கும் புத்திக்கும் பிறந்த இரு ஆண் பிள்ளைகள் அவரை நோக்கி ஓடி வருகிறார்கள். மண்ணுலகில் நடக்கும் விழாவைப் பற்றிக்கேட்கிறார்கள்! அப்பொழுது நாரத மகா முனிவர் அங்கு வந்து சேர்கிறார்! 'ரட்சாபந்தனத்தின்' மகத்துவம் பற்றிக் கூறுகிறார். உடனே அந்தப் பிள்ளைகள், 'தாங் களும் இனி ரட்சை கட்டிக்கொள்ள வேண்டும்; அதற்கு எங்களுக்கு ஒரு சகோதரி வேண்டும்' என்று அடம் பிடிக்கிறார்கள்.

விநாயகப்பெருமானும், ''சகோதரி வேண்டும் என்றால் எங்கே போவது'' என்று கேட்டார். ''சகல ருக்கும், சகல சௌபாக்யங்களையும் நல்கும் பெரு மாளே! நீங்கள் நினைத்தால் நடவாவது என்பதுண்டோ! உங்கள் அருளால் இந்தப் பிள்ளைகளுக்கு ஒரு சகோதரியை உண்டாக்கிக் கொடுங்கள்'' என்று நாரதர் கூறுகிறார்.

உடனே விநாயகப்பெருமான் சித்திபுத்தி என்ற தம் மனைவிமார் மூலம் அழகே உருவான ஒரு சகோதரியை அந்தப் பிள்ளைகளுக்கு உருவாக்கிக் கொடுக்கிறார்.

அந்தக் குழந்தை பார்வதியின் சக்தியையும், லட்சுமி தேவியின் செல்வத்தையும், சரஸ்வதி தேவியின் கல்விச் சிறப்பையும் பெற்றுத் திகழுமாறு விநாயகப் பெருமான் அருள்பாலிக்கிறார்.

மூன்று தேவிமார்களும் அங்கு தோன்றி அந்தக் குழந்தைக்கு ஆசி வழங்குகிறார்கள்! தோன்றிய குழந்தை தம் சகோதரர்களுக்கு 'ரட்சை'யைக் கட்டி வாழ்த்து கிறாள்! ''இந்தப் பிள்ளைகளுக்குச் சந்தோஷத்தை உண்டாக்கியதால் இக்குழந்தை சந்தோஷி என்ற பெயரைப்பெற்று வாழ்வாள்! இவளை வணங்குப வர்கள் எல்லாச் செல்வங்களையும் அடைந்து சந்தோஷ மாக வாழ்வார்கள்'' என்று மும்மூர்த்திகளும் வாழ்த்து கிறார்கள்.

''வெள்ளிக்கிழமை உங்கள் மகள் பிறந்துள் ளாள். வெள்ளிக்கிழமை அவளை எண்ணி விரதமிருப் போர் சகல சௌபாக்யங்களையும் அடைவார்கள்! பெருமானே! உங்கள் அன்பால் உருவான உங்கள் மகளை மண்ணுலகத்து மக்கள் வணங்கி வாழ்வாங்கு வாழ அருள் புரிய வேண்டும்'', என்று நாரத முனிவர் வேண்டுகிறார். அவ்வாறே விநாயகப்பெருமான் அருள் புரிகிறார்.

சந்தோஷிமாதாவின் கதையை அறிந்து அவள் மேல் பக்தி கொண்டு வெள்ளிக்கிழமை விரதமிருந்து எண்ணற்றவர்கள் பலன் பெற்றுள்ளார்கள்.

கைலைமலையில் நாரதப்பெருமான் விநாயகப் பெருமானை சந்தித்து வணங்கினார்.

''வினை தீர்க்கும் விக்னேச்வரரே! மண் உலகெங்கும் உங்கள் மகளான சந்தோஷியின் புகழ்நாளும் பெருகுகின்றது! அவள் தனது பக்தர்களுக்கு சகல ஐஸ்வர்யங்களையும் தந்து வாழவைக்கிறாள்'' என்று மிகுந்த மகிழ்ச்சியோடு கூறினார்!

''நாரத முனிவரே! என் மகள் சந்தோஷியைத் துதிப்பவர்களும், அவள் கதையைப்படிப்பவர்களும், கேட்பவர்களும் சகல ஐஸ்வரியங்களையும் அடைவார்கள்! என்மகள் அவர்கள் அனைவரையும் காத்து அருள் புரிவாள்'', என்று விநாயகர் கூறினார். நாரத முனிவர் நாயகனான விநாயகனை வணங்கி விடைபெறும் பொழுது'' சந்தோஷிமாதா கிஜெய்'' என்று குரல் எழுப்பிப்புறப்பட்டார்.

சந்தோஷி மாதாவின் அருளால் சகல மக்களும் அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அடைவார்களாக என்று பிரார்த்திப்போம்...!

'ஸ்ரீ சந்தோஷிமாதா விரதம்'
மேற்கொள்ளும் வழிமுறைகள்.

ஸ்ரீ சந்தோஷிமாதா விரதத்தை வெள்ளிக் கிழமையன்றுதான் தொடங்க வேண்டும்! அன்று முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பூஜை செய்து வரவேண்டும். எண்ணம் கைகூடியபின் வரக்கூடிய வெள்ளி யன்று பூஜையைப் பூர்த்தி செய்துவிடலாம்.

இந்த விரதத்திற்கு மஞ்சள் பொடி, குங்குமம், வெற்றிலை, பாக்கு, ஊதுபத்தி, சாம்பிராணி கற்பூரம், சந்தனம், திரிநூல், நெய் அல்லது நல்லெண்ணெய், தேங்காய், பழம், மாவிலை, பூக்கள் இவற்றை முன்னதாகவே சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

விரதத்தை வீட்டிற்குள்ளேயோ, வீட்டிற்கு வெளியே தனியான இடங்களிலோ கோயில்களிலோ செய்யலாம். எங்கு செய்தாலும் செய்யும் இடம் மிகவும் அமைதியும், தூய்மையும் உடையதாக இருக்கவேண்டும். விரதத்தை மேற்கொள்கின்ற வெள்ளிக்கிழமையன்று அந்த இடத்தை மெழுகிக் கோலம் போடவேண்டும்! மேடை ஒன்றை அமைத்து அதன் மீது சந்தோஷி மாதா படத்தை வைத்துச் சக்திக்கு தக்கவாறு பூக்களால் அலங்கரித்து பூஜை செய்யவேண்டும். படத்தின் முன் குத்து விளக்கினை ஏற்றி வைக்க வேண்டும். அதற்கு மஞ்சள், சந்தனம், குங்குமம் இவைகளால் அலங்காரம் செய்யவேண்டும்.

கலசமானது தங்கம், வெள்ளி, வெங்கலம் ஆனதாக இருக்க விசேஷம். செம்பிற்குள் அவ்ரவர்கள் சக்திகேற்ற நாணயம் ஒன்றைப் போட வேண்டும். பின்னர் செம்பின்மீது மாவிலைகளை வைத்து அதன் மீது, தேங்காய் ஒன்றை வைக்கவேண்டும். அதற்கு (மஞ்சள் தடவி) சந்தனத்தாலும், பூக்களாலும் அலங்காரம் செய்ய வேண்டும். மஞ்சள்பொடியில் சிறிது தண்ணீர் சேர்த்துப் பிசைந்து மஞ்சளினால் பிள்ளையார் பிடித்துக் கலசத்திற்கு எதிரில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கிண்ணம் ஒன்றில் வறுத்த கடலையும் வெல்லமும் வைத்துக் கொள்ளவேண்டும்.

பின்னர் கையில் கொஞ்சம் வறுத்த கடலையும் வெல்லமும் எடுத்துக்கொண்டு, எண்ணிய காரியம் நிறைவேற வேண்டும் என்று மனதில் நம்பிக்கையுடன் சங்கல்பம் செய்து விக்னேசுவர பூஜையும், சந்தோஷி மாதா பூஜையும் செய்யவேண்டும்.

கதை படித்து முடிந்ததும், மாதவைப்பற்றிய தோத்திரப்பாடல்கள் பாடி நிவேதனம் செய்ய வேண்டும். அதன்பின் கலசத்தில் உள்ள நீரைப் பூஜைக்கு வந்தவர்களுக்குத் தீர்த்தமாகக் கொடுத்து, வீடு முழுவதும் தெளித்தபின் மீதி உள்ள நீரை துளசிச் செடிக்கு ஊற்றவேண்டும். நினைத்த காரியம் கைகூடிய பிறகு விரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

விரதம் பூர்த்தி செய்கின்ற அன்று, பூரி, முந்திரிப் பாயசம், வறுத்த கடலை இவற்றை நிவேத்தியம் செய்யவேண்டும். பின் எல்லோருக்கும் பிரசாதங்களைக் கொடுக்க வேண்டும். வீட்டில் பங்காளிகளின் பிள்ளைகள் இருப்பின் (ஆண்) அவர்கள் எட்டுப் பேருக்கு உணவு அளிக்க வேண்டும். அல்லது தெரிந்தவர்கள் வீட்டுப் பிள்ளைகளாக இருந்தாலும் எட்டுப்பேர்களுக்க உணவு அளிக்க வேண்டும். இவ்விரதம் ஏற்பவர்கள் விரதம் பூர்த்தியாகிறவரை ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் புளியோ, புளிப்புப் பதார்த்தங்களையோ கண்டிப்பாக சாப்பிடக் கூடாது.

ஸ்ரீ சந்தோஷிமாதா விரதத்தை மேற்கொள்பவர்களுக்கும் அதற்கு உதவி செய்பவர்களுக்கும் எல்லா விதமான சௌபாக்யங்களும் உறுதியாக உண்டாகும்.

(பி: கு) வறுத்த கடலை - கொண்டைக்கடலை (அ) உப்புக் கடலை என்றும் சொல்வார்கள்.


ஆவணி மாதம் பௌர்ணமி நன்னாளில் 'ரட்சா பந்தனம்' என்று, இத்தேவி தன் (உடன் பிறப்புகளுக்கு) சகோதரர்களுக்கு ரட்சை கட்டுவதே 'ரட்சாபந்தன'ப் பெரு விழாவாக நடக்கிறது. இதுவே 'ரட்சாபந்தன' மாகும்.

சுபம்.

***

# நந்தகுமாரன் செய்த விந்தை

- ரங்கமணிப் பாட்டி, திருவரங்கம்



1. அந்திப் பொழுதினிலே ஒரு நாள் பிருந்தாவனம் தனிலே
நந்தகுமாரன் செய்த விந்தையை என்ன சொல்வேன்?
சொந்தமுடனே அருகினில் வந்தான், அந்தரங்க
சேதி சொன்னான்.
அந்த மோகன புன்னகையில் என் சிந்தை லயித்து எனை
மறந்தேன்.

2. வண்ணநறுமலர் என் கூந்தலில் வண்ணமுறச் செய்து
என்னை அணைத்தான் - மணி
வண்ணன் என் கைத்தலம் பற்றி - அந்த
வண்ண பூங்காவில் உலாவி வந்தான்.

3. கண்ணன் எனக்கேதான் என்ற நினைவினில்
கண்ணை மூடியே நினைவிழந்தேன் - ஒரு
கணம் சென்ற பின்னே கண் திறந்தேன் - அந்த
கள்வனும் எங்கோ மறைந்துவிட்டான்.

4. ஏதொன்றும் தோன்றாமல் ஏங்கி மயங்கியே
மாதவனே! கண்ணா! என்றழுதேன் - வேணு
கீதம் தொலைவினில் கேட்டிடவே, அந்த
கானில் திரிந்தேன் காலும் நொந்தேன்.

5. காத வழி தூரம் சென்ற பின்னே -
கள்வனை யமுனைக்கரைதனிலே
மாதரசி ராதையுடன் இன்ப
போதையுடன் உலாவக் கண்டேன்.

6. இப்படி என்னை ஏங்கவைத்துவிட்டு
செப்பிடு வித்தைகள் செய்து விட்டாயே! - அந்த
நப்பின்னை தான் உனக்கேற்றவளோ? - என்ன
ஞாயமிது எனக்கேட்டு நின்றேன்.

7. அப்பொழுது மனம் அல்லலுற்றதனால்
வெப்பமுடனே மூர்ச்சித்து விட்டேன்.
பிற்பொழுது கண் விழித்து புலம்பிட
சொற்ப கனவெனவே தெளிந்தேன்.

8. கண்ணன் எனும் கருந்தெய்வம்
கண் திறந்தருள் செய்வானே!
எண்ணிலாத என் கலியைத் தீர்த்து
என்னை அடிமை கொள்வானே!

9. உண்டு என்பவர்க்கு உற்றவன் யானென
பண்டு மொழிந்ததைச் செய்வானே!
கண்டு மனக்குறை தீராதோ?
மீண்டும் என் கனவு நனவாகாதோ?

★★★

# கண்ணனின் புன்னகை

- திருமதி இந்திரா ஆராஅமுதன்

தேவலோகத்திற்கே உரிய பாரிஜாதமலரை நாரதர் துவாரகையில் இருக்கும் ருக்மணிதேவியிடம் கொண்டுவந்து கொடுத்தார். அவள் அதைத் தலையில் சூடிக்கொண்டாள். அதன் வாசனை வெகுதூரம் சென்று சத்யபாமாவின் நாசியை வருடியது. பொறாமை குணம் கொண்ட சத்யபாமா ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் கோபித்துக்கொண்டு, தனக்கும் அந்த மலரை கொண்டு வந்து தருமாறு நச்சரிக்க ஆரம்பித்தாள். அவளுடைய நச்சரிப்பைத் தாங்க மாட்டாத கிருஷ்ணனும், ''பாரிஜாத மலர்தானே உனக்கு வேண்டும். நான் அந்த மரத்தையே உன்னுடைய தோட்டத்தில் கொண்டுவந்து வைத்து விடுகிறேன், போதுமா?'' என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போது, இந்திரன் தன்னுடைய வாகனமான ஐராவதத்தின் மீதேறி கண்ணனைப் பார்க்க வந்து கொண்டிருந்தான்.

''என்ன விஷயம் தேவேந்திரா?'' என்று ஒன்றுமே தெரியாததுமாதிரி வினவினார் கிருஷ்ணன்.

''லோக நாதனான கிருஷ்ண பகவானே! தேனுகன், அரிஷ்டன், கேசி, கம்சன், பூதனை போன்ற வர்களை அழித்து தேவர்களான எங்களின் துயரைத் துடைத்திருக்கிறீர்கள். அவர்களையெல்லாம் மிஞ்சக் கூடிய வகையில் இப்போது ஒரு புதிய அசுரன் நரகன் என்கிற பெயரில் சொல்லமுடியாத கொடுமைகளைச் செய்து வருகிறான். தேவர்கள், சித்தர்களின் கன்னிகை களை அபகரித்துச் சென்றுவிட்டான். எப்போதும் தண்ணீரைப் பெருக்கிக்கொண்டிருக்கும் வருணனின் குடையின் கீழ் உட்கார்ந்தால் துயரமே தெரியாது. அப்படிப்பட்ட குடையையும், மந்தரமலையின் சிகர மான மணிபர்வதத்தையும், என்னுடைய தாயாரான அதிதிதேவியின் அமுதத்தைப் பெருக்கும் அதிசயம் உடைய இரண்டு குண்டலங்களையும் எடுத்துச் சென்று விட்டான். எப்போது என்னுடைய ஐராவதத்தையும் இழந்து விடுவேனோ என்கிற பயத்தில்தான் இப்போது உங்களிடம் உதவி கேட்டு ஓடி வந்திருக்கிறேன். அந்த நரகாசுரனைக் கொன்று நாங்கள் இழந்த பொருட்களை மீட்டுத்தரவேண்டும்.'' என்று பணிவுடன் இந்திரன் சொன்னதைக் கேட்ட கண்ணனின் முகத்தில் புன்னகை அரும்பியது. அந்த புன்னகைக்கான காரணம் இது தான்.

'மனுஷ்ய நாற்றம் வீசுகிறது' என்று சொல்லி தேவர்கள் பூமியில் கால் வைக்க விரும்பமாட்டார்கள் என்று சொல்வார்கள். தேவர்களின் தலைவனான இந்திர னைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா! அப்படிப் பட்டவன் இப்போது ஓடி வந்திருக்கிறான் என்றால் அதற்குக் காரணம் நரகாசுரனின் கொடுமைதான் என்று புரிந்துகொண்டார் கிருஷ்ணன்.

காரியம் ஆகவேண்டும் என்றால் இந்திரனைப் போன்ற சுயநலவாதிகள் எதையும் செய்வார்கள். காரியம் ஆனபிறகு செய்த நன்றியை மறந்துவிடு வார்கள். பாரிஜாதமரத்தை எடுத்துப் போகும்போது என்னையே எதிர்த்து போருக்கும் வருவான் என்பதை அறிந்துதான் கண்ணன் புன்னகை செய்தார். செய்ந் நன்றி மறப்பவர்களாக இருந்தாலும், அண்டினவர் களைக் காக்கத்தானே வேண்டும்! இந்திரனுக்கு நரகா சுரனைக் கொல்வதாக உறுதி அளித்துவிட்டு சத்ய பாமாவையும் கருடன்மேல் ஏற்றிக்கொண்டு நரகாசுரன் வசிக்கும் ப்ராக்ஜோதிஷபுரம் சென்றார்.

யுத்த பூமிக்குப் பெண்களை அழைத்துச் செல்ல லாமா என்று கேள்வி எழுகிறது அல்லவா! ஒவ் வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு என்பது போல, ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடிக்க எண்ணினார் கிருஷ்ணர்.


முன்பு வராஹ அவதாரம் எடுத்தபோது பூமிப் பிராட்டியை தன்னுடைய கோரப் பற்களின் நுனியால் மேலே கொண்டுவந்தார். வராஹ மூர்த்தியின் சம்பந்தத் தினால் பூமிதேவி ஒரு ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். இவனுடைய அசுர சுபாவத்தை முன்னமேயே சுவி அறிந்துகொண்ட பெருமாள், பிராட்டியிடம், ''தேவி! உன் புத்திரனான இவனை நானே உன் எதிரில் கொல்ல

வேண்டி வரும்'' என்று அப்போதே சொல்லியிருந்தார். பூமிப்பிராட்டியின் அம்சமாகத்தான் சத்யபாமா பிறந்திருக்கிறாள்.

சத்யபாமாவின் ஆசைப்படியே பாரிஜாத மலரை மரத்துடன் எடுத்து வரும்போது, நன்றி மறந்த இந்திரனிடம் போர் புரியவும் நேரிடும். சசிதேவியால் அலட்சியப்படுத்தப்பட்ட சத்யபாமாவின் கோபம் இந்திரனிடம் வெடிக்கும் என்பதையெல்லாம் அறிந்த தால்தான் ஸ்ரீகிருஷ்ணன் பாமாவைத் தன்னுடன் யுத்தபூமிக்கு அழைத்துச் சென்றார்.

நரகாசுரனுக்கு முரன் என்கிற ஒரு மந்திரி உண்டு. அவன் ப்ராக்ஜோதிஷபுரத்தை யாரும் நெருங்க முடியாதவாறு நூறு காததூரத்திற்கு பாசக் கயிறு களைப் பரப்பிவைத்திருந்தான். அந்த கயிறுகளின் மேற்புறத்தில் சிறு சிறு கத்திகளையும் பதித்திருந் தான். சக்ராயுதத்தை ஏவி இவைகளை அறுத்துவிட்டு, எதிர்த்து வந்த முரனையும் ஸ்ரீ கிருஷ்ணன் கொன்றார். பின் முரனுடைய ஏழாயிரம் பிள்ளைகளையும், ஹயக்ரீ வன், பஞ்சஜனன் ஆகியவர்களையும் கொன்றுவிட்டு நரகாசுரனைத் தேடி நகரத்துள் புகுந்தார். இருவருக்கும் கடும் யுத்தம் நடந்தது. நரகனும் பல பாணங்களை கிருஷ்ணன் மேல் ஏவியதால் கடைசியில் கிருஷ்ணன் தன் சக்கரத்தை ப்ரயோகித்து நரகனை வதம் செய்தார். பிள்ளையாக இருந்தாலும், கொடியவனாக இருந்தால் கொல்லத்தானே வேண்டும். ''என்னுடைய (பூமியின்) பாரத்தைக் குறைப்பதற்காகத்தானே நீங்கள் அவதரித் திருக்கிறீர்கள். நம் புத்திரனான நரகன் செய்த அபராதங் களையெல்லாம் மன்னித்துவிட்டு அவன் இறந்த இந்த நாளை உலக மக்கள் அனைவரும் நன்னாளாக கொண்டாடவேண்டும் என்று பிராட்டியான சத்யபாமா வேண்டியபடியே தீபாவளி நன்னாளாக எல்லாரும் கொண்டாட ஆரம்பித்தார்கள். அவனிடம் இருந்த அதிதியின் குண்டலங்களை கண்ணனிடம் தந்தாள் சத்யபாமா.

பிறகு கண்ணன் நரகனுடைய அரண்மனைக் குள் போய், சிறை வைக்கப்பட்டிருந்த பதினாறாயிரத்து நூறு கன்னிகைகளையும் விடுதலை செய்தார். அவர் கள் சிறையில் இருந்தபோதிலும் அவர்களுடைய கற்புக்கு பங்கம் வரவில்லை என்பதை வெகு அழகாகச் சொல்கிறார் ஸ்ரீ தேசிகன் இவ்வாறு: பணத்தை மூட்டை யாகக் கட்டி அதற்கு சீல் அதாவது முத்திரை வைப் பார்கள் அல்லவா? முத்திரை உடையாமல் இருந்தால் பணம் பத்திரமாக இருக்கிறது என்று நினைப்பது போல, இவர்கள் மாசு படாதவர்கள் என்கிற அர்த்தத் தில் முத்திரை அழியாத மூலதன மடிப்புகள் என்று கூறுகிறார். இவர்களையும், நான்கு தந்தம் கொண்ட ஆறாயிரம் யானைகளையும், காம்போஜ தேசத்து இருபத்தியோரு லக்ஷம் குதிரைகளையும் நரகாசுரனின் வேலையாட்களைக் கொண்டே துவாரகையில் சேர்க்கச் சொன்னார் கிருஷ்ணன்.



பின் வருணனின் குடை, மணிபர்வதம் ஆகிய வற்றை கருடன் மீது ஏற்றி, அதிதியிடம் அவளுடைய குண்டலங்களைச் சேர்ப்பிப்பதற்காக பாமாவுடன் தேவலோகம் சென்றார்.

தேவலோகம் சென்றவுடன் கண்ணன் சங்கை எடுத்து முழக்கினார். சங்கநாதத்தைக் கேட்டவுடன்

நரகாசுரனை அழித்து விட்டார் கண்ணன் என்பதை தேவர்கள் புரிந்துகொண்டு உடனே ஓடி வந்து எதிர் கொண்டு அழைத்து அர்ச்சித்தார்கள்.

தேவமாதாவான அதிதிதேவி வெள்ளை மாளிகை யில் வசித்து வந்தாள். அவளிடம் சென்று நடந்தவற்றை யெல்லாம் கூறி அவருடைய குண்டலங்களைத் திருப்பிக் கொடுத்தார் கண்ணன். குண்டலங்கள் மறுபடி கிடைக்கப்பெற்ற ஆனந்தத்தில் அதிதி தேவி கண்ணனுடைய மஹிமையை அறிந்து மிகவும் பக்தி யுடன் துதிக்க ஆரம்பித்தாள் இவ்வாறு.

''எம்பெருமானே! உலகில் பலரும் மோக்ஷத்தை விரும்பாமல் சம்சார சௌக்யத்தையே விரும்புகிறார் களே தவிர மாயைக்கு வசப்படாமல் தர்மங்களை அநுஷ்டித்து சம்சார பந்தங்களிலிருந்து விடுபட மாட்டேன் என்கிறார்களே. இது உன் மாயையினால் தானே கண்ணா! மற்றவர்களைச் சொல்லவேண்டாம். என்னையே எடுத்துக் கொள்கிறேன். உன்னுடைய சிறந்த பக்தரான கச்யபரின் மனைவிதான் நான். முன்பு நியமங்களுடன் உன்னை ஆராதித்து உன்னையே பிள்ளையாக வேண்டிப் பெற்றேன். தேவர்கள் அசுரர் களை வெல்லவேண்டும் என்ற அற்ப விஷயத்தைக் கேட்டேனே தவிர உன்னிடம் மோக்ஷத்தைக் கேட்கத் தெரியாமல் இருந்துவிட்டேனே. என் அஞ்ஞானத்தை நீதான் போக்கவேண்டும்'' என்று அருள் வேண்டி நின்றாள்.

பரம ஞானத்துடன் தன்னுடைய ஸ்வரூபத்தை யும் அறிந்து தன்னை ஸ்தோத்ரம் செய்த அதிதியை சுயரூபத்திற்கு கொண்டு வருவதற்காக ஒரு மாயப் புன்னகையை அவள் மீது வீசினார் கண்ண பரமாத்மா. அவரது புன்னகையில் மயங்கி நின்றவளிடம் கண்ணன் இவ்வாறு சொன்னார்.

''அதிதி தேவியே! என்னை அருள் செய்யும்படி வேண்டுகிறாயே? நீ என் தாய் அல்லவா! மறந்து விட்டாயா? புத்திரனா தாய்க்கு அருள் செய்யமுடியும்? தாய்தானே மகனுக்கு ஆசி தர வேண்டும். நீதான் எனக்கு ஆசி வழங்க வேண்டும்'' என்று கண்ணன் சொன்ன வுடன், சற்று முன் கண்ணனைத் தெய்வமாக நினைத்து மோக்ஷத்தை கொடுக்குமாறு கேட்டது எல்லாவற்றை யும் கண்ணனின் புன்னகையில் மயங்கி ஒரு சாதாரண தாயாகத் தன்னை நினைத்துக்கொண்டு ஆசிகள் வழங்க ஆரம்பித்தாள்.

''கண்ணா! நீ விரும்பியபடியே உனக்கு நான் ஆசிகள் செய்கிறேனப்பா! யாருமே உன்னை வெல்லமுடியாதபடி ஸர்வ உத்தமனாக பூலோகத்தில் விளங்கப் போகிறாய்'' என்றாள். பின் சத்யபாமாவும் அவளை வணங்கினாள். அவளுக்கும் மாறுபடாத இளமையும், அழியாத அழகும் எப்பொழுதும் இருக்கு மாறு ஆசிர்வாதம் வழங்கினாள். பின் இவர்கள் இரு வரையும் நன்கு உபசரிக்குமாறு தன் மகன் இந்திர னுக்கும், மருமகள் இந்திராணிக்கும் உத்தரவிட்டாள்.

கண்ணனும் சத்யபாமாவும் நன்றாக உபசரிக்கப் பட்டிருந்த வேளையில் வேலையாட்கள் நிறைய பாரிஜாதமலர்களை சசிதேவியிடம் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

சத்யபாமாவை பூமிப்பிராட்டியின் அவதாரம் என்று அறியாத சசிதேவி சாதாரண மனிதப்பிறவி யாகத்தான் நினைத்தாள். அதனால் மனிதர்களுக்கு இந்தப் பூவைச் சூட்டிக் கொள்ள தகுதி இல்லை என்றும் தேவஸ்திரீகள் மட்டும் தான் சூடிக்கொள்ளும் தகுதி உடையவர்கள் என்றும் கர்வத்துடன் அத்தனை மலர் களையும் தானே சூடிக்கொண்டுவிட்டாள். நம் கையில் மலர்கள் இருக்கும்போது முன் பின் தெரியாத பெண் ணைப் பார்த்தால் கூட மலரைக் கொடுப்பது நம் முடைய மனித பண்பாடு, தான் இந்திரனின் மனைவி என்ற கர்வம் கொண்ட சசிதேவி இந்த பண்பாடு களைப் பற்றி தெரிந்திருக்காவிட்டாலும், தனக்கு உதவி செய்தவரின் மனைவி என்ற காரணத்திற்காக வாவது ஒரு மலரை பாமாவுக்கு கொடுத்திருக்கலாம். அகந்தை கண்ணை மறைக்கும் என்று சொல்வதைப் போல மனுஷ பெண்தானே என்று அலட்சியம் செய்து விட்டாள். இதைப் பொருட்படுத்தாமல் கண்ணனும் பாமாவும் ஊருக்குப் புறப்பட்டனர். அதிதியிடமும் இந்திரனிடமும் விடைபெற்றுக்கொண்டு.

வழியில் இந்திரனின் நந்தவனம் குறுக்கிட்டது. பாற்கடலிலிருந்து தோன்றிய பாரிஜாத மரத்தைப் பார்த்ததும் அதன் அருகே சென்றனர். அதன் பட்டைகள் யாவும் தங்கத் தகடுகள் போல பிரகாசித்தன. அதன் அழகில் சற்று மயங்கிநின்றவுடன், பாமாவுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியும், சற்று முன் இந்திரன் மனைவி செய்த அலட்சியமும் கண்ணனுக்கு ஞாபகத் துக்கு வந்தது. உடனே மரத்தைப் பறித்து கருடன் மீது ஏற்றிவிட்டார்.

முன்பு தாய் வினதைக்காக அம்ருதத்தை அபகரித்துக் கொண்டுவந்த கருடன் இப்பொழுது பிராட்டிக்காக பாரிஜாத மரத்தை அபகரித்த எம்பெரு மானுக்கு உதவி செய்வதற்காக அந்த மரத்தைத் தன் இறக்கையின் உட்புறத்தில் காடுபோல் இருக்கும் சிறகுகளுக்கு இடையே மறைத்து வைத்துக் கொண்டு அவர்கள் இருவருடன் வேகமாக பறக்கத் துவங் கினான்.

இதைக் கண்ட தோட்ட காவலாளிகள் எதிர்த்தனர். இந்திரனுடைய வேலைக்காரர்கள் என்று அவர்களுக்கு மிகுந்த கர்வம் உண்டு. கண்ணனின் பெருமையை அறியாததால் கண்ணனைப் பார்த்து ''கண்ணா! இந்த பாரிஜாதமரம் அமுதம் கடைந்த போது வந்தது. தேவர்கள் அனைவரும் இந்திரனுடைய பட்டமகிஷிக்காக விட்டுக் கொடுத்தார்கள். அவள் மட்டும்தான் இந்த மலர்களால் அலங்கரித்துக் கொள்ள முடியும். அப்படிப்பட்ட மரத்தை நீ அபகரித்துச் சென்றுவிட முடியுமா? சசிதேவியின் முகம் கோணாமல் அதைப் பார்த்துத்தான் இந்திரன் எல்லாக் காரியங்களையும் செய்து வருகிறான். அவள் விரும்பும் மரத்தை நீ கொண்டு செல்வதை அறிந்தால், ஸகல தேவர்களுடன் உன்னுடன் யுத்தம் செய்ய இந்திரன் வந்துவிடுவார். அவரிடம் வஜ்ராயுதம் இருப்பதை ஞாபகம் வைத்துக் கொள். மரத்தை விட்டுச் செல்' என்று தடுத்தார்கள் காவலாளிகள்.

அவர்களுக்கு கண்ணன் பதில் சொல்வதற்கு முன்பு, சசி தேவியின் செய்கையால் கொதித்துப் போயிருந்த சத்யபாமா சுடச் சுட கோபத்துடன் ஆரம்பித்தாள்.

''அடே காவலாளிகளே? யார் அந்த சசி தேவி, யார் அந்த இந்திரன்? கடலிலிருந்து தோன்றியது பாரிஜாத மரம் என்று நீங்களே சொல்கிறீர்களே. கடலிலிருந்து தோன்றிய பொருட்கள் எல்லாருக்கும் பயன்படுமாறு பொதுவாகத்தானே இருக்கவேண்டும்? அமுதம், சந்திரன், காமதேனு போன்றவைகள் போல இந்த மரமும் பொதுவாகத்தானே இருக்கவேண்டும்? அவளை விட மிகுந்த கர்வம் கொண்டு நான் சொல்லும் வார்த்தைகளை அவனிடம் போய்ச் சொல்லுங்கள். ''சசிதேவியே! என்னுடைய நாதன் உன் பாரிஜாத மரத்தை அபகரித்துச் செல்கிறார். உன்னையும் அறிவேன், உன் கணவன் தேவர்களை ஆளும் திறனையும் அறிவேன். நான் சாதாரண மநுஷ்ய ஸ்த்ரீ என்கிற காரணத்தினால்தானே எனக்கு அந்த மலர்களைத் தராமல் அவமதித்தாய்? உன் கணவன் உன் சொற்படி நடப்பதாக இருந்தால், வந்து என்கணவருடன் போரிடச் சொல்லு. பராக்ரமத்தைக் காட்டச் சொல்லு உன் பர்த்தாவிடம்'' என்று சத்யபாமா சொன்னவைகளை ஒன்றுவிடாமல் தங்கள் ராணியிடம் காவலாளிகள் சென்று தெரிவித்தார்கள்.

ஒரு சாதாரண மநுஷ்ய ஸ்த்ரீ தனக்கு சவால் விடுவதா என்று கோபம் கொண்ட சசிதேவி தன் கணவனை உசுப்பிவிட்டாள்.

தன் சத்ருவான நரகனைக் கொன்று, தன் தாயின் குண்டலங்களை மீட்டுத் தந்த கண்ணனுக்கு அவர் ஆசைப்பட்ட மரத்தை தானாகவே கொடுத்து நன்றிக் கடனைத் தீர்த்திருக்கலாம், ஆனால் அவன் தான், செய்த நன்றியை மறந்தவனாகவும் ஆனான். மனைவியின் பேச்சுக்குக் கட்டுப்பட்டவனாகவும் சுய புத்தியை இழந்தவனாகவும் ஆனான். அதனால் உடனே தன் வாகனமான ஐராவதத்தின் மேல் ஏறிக்கொண்டு அமரர்கள் புடைசூழ கண்ணனை எதிர்த்துப் போரிடக் கிளம்பி விட்டான்.

இவன் வருவதைப் பார்த்துவிட்ட கண்ணனும் தன் கையில் இருக்கும் சங்கத்தை எடுத்து கம்பீரமாக ஊதினார். இரு தரப்பிலும் சரமாரியாக பாணங்களையும் அம்புகளையும் பிரயோகித்தனர். தேவ தேவனான கண்ணனுக்கும் தேவர்களுக்கும் நடக்கும் சண்டையில் வருணன் முதலில் பாசக்கயிறுகளை வீசினான். கருடன் தன் மூக்கினால் அதைத் துண்டித்தான். யமன் பிரயோகித்த கால தண்டத்தை கண்ணன் ஒடித்து வீழ்த்தினார். குபேரனுடைய பல்லக்கையும் ஒடித்தார். பதினோரு ருத்ரர்கள் சூலம் கொண்டு எதிர்த்தபோது, சக்ராயுதத்தினால் ஒடித்து அவர்களை வீழ்த்தினார். கருடனும் தன் பங்குக்கு தன் மூக்கு, கால்நகங்கள், இறக்கைகள் இவற்றால் தேவர்களை அடித்து விழுங்கினான். தேவர்களின் பாணங்களும், இந்திரனின் ஆயுதங்களும் அழிந்துவிட்டன. இனி கடைசியாக வஜ்ராயுதத்தை ப்ரயோகிக்கலாம் என்று எண்ணி அதைக் கையில் ஏந்தி நின்றான். அதைக் கண்ட கண்ணன் சக்ராயுதத்தைத் தன் கையில் ஏந்தியதைப் பார்த்த அனைவரும் பயந்து கூக்குரலிட்டனர். இந்திரன் வீசிய வஜ்ராயுதத்தைக் கண்ணன் அப்படியே பற்றிக் கொண்டு விட்டார். பதிலுக்கு சக்ராயுதத்தை அவர் வீசவில்லை. காரணம், தன்னை அண்டியவர்கள் அபராதம் செய்தாலும் அவர்களைக் கொல்லக் கூடாது என்கிற தயாள குணம் கொண்டவர் அல்லவா பகவான்! தேவர்களுக்குப் பாடம் புகட்ட எண்ணினாரே தவிர, அழிக்க விரும்ப வில்லை. தப்பிப் போகப் பார்த்த இந்திரனை ''இந்திரா, நில் ஓடாதே'' என்று கண்ணன் கூறியவுடன், ஐரா வதத்தை கருடன் ஓர் அடி அடித்து அயரச் செய்தான் தப்பிப் போகாத வண்ணம்.

அப்போதும் கண்ணனுக்குப் பதிலாக சத்யபாமாதான் ஆரம்பித்தாள்.

''இந்திரா! சசிதேவிக்கு பர்த்தாவான நீ ஏன் ஓடப்பார்க்கிறாய்? இந்த பாரிஜாத மரத்தை நீயே எடுத்துச்செல். மநுஷ்ய ஸ்த்ரீயான நானே உனக்குத் தருகிறேன். தேவராஜனின் பத்தினி என்ற காரணத்தினால் உன் மனைவி எனக்கு அந்த மலர்களைத் தராமல் அலட்சியப்படுத்தினாள். என் பர்த்தாவின் பெருமையைக் காட்டுவதற்காகவே உன்னுடன் யுத்தம்

செய்யத் தூண்டினேன். எல்லா ஸ்த்ரீகளுக்கும் தன் பர்த்தாவின் பெருமையில் கர்வம் கொள்ளத்தான் தோன்றும். உன் மனைவியும் அதற்கு விதிவிலக்கு அல்ல. இருந்தாலும் அவள் கர்வத்தை ஒடுக்கத்தான் நான் இவ்வாறு செய்தேன். எனக்கு எதற்கு பிறருடைய பொருள். நீயே எடுத்துக் கொள்'' என்று சத்யபாமா சொன்னவுடன் இந்திரனுக்கு தான் செய்தது தவறு என்று உணரமுடிந்தது.

''ஜகத்திற்கெல்லாம் நாதனான நாராயணன் தான் கண்ணனாக வந்திருக்கிறார். அவரிடம் தோற்றதும் சிறந்ததுதான். உலகத்துக்கு உபகாரம் செய்வதற்காகத் தான் மநுஷ்யனாகப் பிறக்கிறார். இப்படிப்பட்டவரை யார்தாம் ஜெயிக்க முடியும்?'' என்று தத்துவம் பேசினார்.

தேவராஜன் செய்த துதியைக் கேட்டு கண்ணன் கம்பீரமாகச் சிரித்தார். இப்போது இவ்வாறு புகழு கிறான். மறுபடி ரஜஸ் தமோ குணம் தலையெடுக்கும் போது சண்டைக்கு வருவான். இவனுடைய புகழ்ச்சிக் கெல்லாம் அர்த்தமே இருக்காது என்று நினைத்து சிரித்தார். சசிதேவியின் பேச்சைக் கேட்டு தன்னையும் சத்யபாமாவையும் சாதாரண மநுஷ்ய ஜாதி என்று நினைத்துதானே சண்டைக்கு வந்தான் என்று அவனுக்கு பாடம் கற்பிக்க எண்ணினார்.

''தேவர்களுக்கெல்லாம் அரசனே! தாங்களோ தேவேந்திரன். நானோ சாதாரண மனிதன். ஆகையால் பாரிஜாதமரம் எனக்கு வேண்டாம். சத்யபாமாவுக் காகத்தான் எடுத்தேன். என்மீது தாங்கள் எறிந்த வஜ்ராயுதத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்ருக் களை அழிப்பதற்காக தங்களுக்கே ஏற்பட்டது இது'' என்று பரிகாசமாக கண்ணன் பேசியதைக் கேட்டு வெட்கம் கொண்டான் இந்திரன்.

''கிருஷ்ணா! நீதான் தேவராஜன்! ஜகத்திற் கெல்லாம் நாதன்! விஷ்ணுவும் நீயே, பஞ்சாயுதம் கொண்ட பரமனும் நீதான். இப்போது தான் நீ பரம் பொருள் என்பதை அறிந்து கொண்டேன். நான் செய்த அபராதத்தைப் பொறுத்துக் கொண்டு, இந்த பாரிஜாத மரத்தை துவாரகைக்கு எடுத்துச் செல். நீ மநுஷ்ய லோகத்தை விட்டு போகும்போது இந்த மரம் என்னிடம் வந்துவிடும். அதுவரை அங்கு இருக்கட்டும். நான் செய்த அபராதத்தை மன்னித்துவிடும்படி மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்'' என்று தீனமாக இந்திரன் கூறினான்.

தவறை உணர்ந்தவர்களை மன்னிப்பதுதான் பகவானின் தயாள குணம் ஆயிற்றே! அதனால் இந்திரனை மன்னித்துவிட்டு, அவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கருடன் மீது சத்யபாமாவுடன் கிளம்பும்போது தேவர்கள், சித்தர்கள், கந்தர்வர்கள் எல்லாரும் பல்லாண்டு பாடி வழியனுப்பி வைத் தார்கள்.

துவாரகைக்கு வந்தவுடன் கிருஷ்ணன் சங்கத்தை முழக்கினார். சங்க நாதத்தைக் கேட்ட துவாரகாவாசிகள் அனைவரும் நரகாசுரனைக் கொன்று வெற்றிவாகை சூடி பாமாவுடன் கருடன் மீதிருந்து கம்பீரமாக இறங்கும் கண்ணனுக்கு ஆரத்தி எடுத்து மகிழ்ந்தனர்.

ப்ராக்ஜோதிஷபுரத்திலிருந்து கொண்டுவந்த யானை, குதிரை, பணம் முதலியவற்றை அனை வருக்கும் கிருஷ்ணன் பங்குபோட்டுக் கொடுத்தார்.

பாரிஜாத மரத்தை சத்யபாமாவின் வீட்டுத் தோட்டத்தில் நட்டு வைத்தார். யாதவர்கள் எல்லாரும் அதன் பக்கம் போய் நின்று பார்த்து கண்ணாடிபோல் விளங்கும் அதனுடைய மரப்பட்டைகளில் தங்கள் முகங்களைப் பார்த்தபடி கோலாகலமாக இருந்தார்கள்.

நரகாசுரன் பிடியிலிருந்து சிறை மீட்டிருந்த பதினாறாயிரம் பெண்களையும் ஒரு நல்ல சுப முஹூர்த்தத்தில் விதிமுறைப்படி க்ருஷ்ணன் விவாகம் செய்துகொண்டார். அத்தனை தேவிமார்களின் மாளிகை யிலும் பற்பல ரூபங்களில் இருந்துகொண்டு, அவர்கள் பணி செய்ய துவாரகையின் நாயகனாக வீற்றிருந்து அழகிய மணவாளனாக கிருஷ்ண பரமாத்மா விளங்கி னார் என்றால் அது ஸ்ரீகிருஷ்ணனால் மட்டுமே முடியும் என்பது புரிகிறது.

ஆழ்வார்களில் தலைசிறந்தவர் பெரியாழ்வார், பெருமாளுக்கே மாமனார் ஆனவர். அவருடைய வாயால் பெருமாளுக்கே பல்லாண்டு பாடியவர். அப்படிப்பட்டவர் இந்திரனுக்கும் ஒரு பட்டம் தரு கிறார். அது என்னவென்றால்,

''என்நாதன் தேவிக்கு அன்று இன்பப்பூ ஈயாதாள்
தன்நாதன் காணவே தண்பூ மரத்தினை
வன்நாதப் புள்ளால் வலியப் பறித்திட்ட
என்நாதன் வன்மையைப் பாடிப் பற
எம்பிரான் வன்மையைப் பாடிப் பற''

தன் வீடு தேடி வந்த லோகநாதனுடைய தேவிக்கு பூவும் தராதவள்! பூவையே கொடுக்காதவள் வேறு என்ன கொடுப்பாள்? அப்படிப்பட்ட சிறுமை மனம் கொண்டவருடைய நாதன் இந்திரன் என்பதை ''இன்பப்பூ ஈயாதான்தன் நாதன்'' என்று சொல்லி வருந்தினார். எத்தனை யுகங்கள் ஆனாலும் இந்த அவப்பெயரிலிருந்து இந்திரனுக்கு ஒரு நாளும் விடுதலை கிடைக்காது. கண்ணன் மட்டும் இந்த பாசுரத்தை கேட்டு புன்னகை செய்தபடி இருந்தார்.

★ ★ ★

# தீரா நோய் தீர்க்கும் ஸ்ரீசீராள சிறுத்தொண்டர் திருக்கோயில்

- என்.எம்.கே. ஆறுமுகம்

காவிரி நதி பாயும் சோழ வள நாட்டில் திருச்செங் காட்டாங்குடி என்னும் ஊரில் மாமாத்திரர் குலத்தில் பிறந்தவர் பரஞ்சோதி என்னும் சிறந்த சிவபக்தர். கி.பி. 630-668ல் ஆட்சி புரிந்த நரசிம்மவர்ம பல்லவ மன்னனிடம் படைத்தளபதியாக இருந்து மன்னனின் ஆணைக்கு இணங்க வடதிசையிலுள்ள வாதாபி மீது படையெடுத்து வெற்றி வாகை சூடி அங்கிருந்து கணபதி சிலை மற்றும் ஏராளமான பொருட்களை எடுத்து வந்து மன்னனிடம் ஒப்படைத்தார். மன்னனும் மகிழ்ச்சியுற்று அவரைப் பாராட்டியதோடு அவரது சிவபக்தியை அறிந்து அவரைப் போரில் ஈடுபடுத்திய தற்கு மிகவும் மனம் வருந்தினார். மேலும் அவருக்கு ஏராளமான நிலங்களை தானமாகக் கொடுத்து வேலை யில் இருந்தும் விடை கொடுத்துத் தொடர்ந்து சிவத் தொண்டு செய்து வருமாறு பணித்தார்.

அதனை ஏற்று பரஞ்சோதியார் தம் ஊருக்கு அருகில் உள்ள இடத்தில், தாம் வாதாபியிலிருந்து கொண்டு வந்த கணபதி சிலையை ஸ்தாபித்து வழி பட்டு வந்தார். அதன் காரணமாக அந்த ஊரின் பெயர் கணபதீசுவரம் என்று வழங்கலாயிற்று. அதுமுதல்தான் கணபதி வழிபாடு தமிழ்நாட்டில் ஆரம்பமாயிற்று என்பது வரலாற்று ஆய்வாளர்கள் கூற்று.

பரஞ்சோதியார் திருவெண்காட்டு நங்கையை மணந்து இல்லற வாழ்வில் இனிதே இன்புற்று, தினமும் தம் இல்லம் வரும் சிவனடியார்களுக்கு அமுது படைத்து அவர்களை உண்டு உபசரித்த பின்னரே தாம் உணவு உண்பதை கடமையாகக் கொண்டு வாழ்ந்து வந்தார் கள். அதனால் பரஞ்சோதியார், சிறுத்தொண்டர் என்று அனைவராலும் போற்றிப் புகழப்பட்டார்.

அவர்களுக்கு இறைவன் அருளால் சீராளன் எனும் அழகான ஆண்குழந்தையும் பிறந்து வளர்ந்து வந்தான். சிறுத்தொண்டரின் சிவத் தொண்டினையும் சிவபக்தியையும் கேள்வியுற்று திருஞானசம்பந்த பெருமான் திருச்செங்காட்டாங்குடி வந்து அவரை வாழ்த்தியதோடு பதினோரு பாடல்கள் பாடிப் பாராட்டி சிறப்பித்துள்ளார்.

சிறுத்தொண்டரின் சிவபக்தியைச் சோதிக்க வேண்டி சிவபெருமான் காவி உடை தரித்து இடக் கையில் சூலமும், வலக்கையில் தமருகமும் விளங்கிட வயிரவராய் வேடம் கொண்டு சிறுத்தொண்டர் இல்லம் வந்தார். தினமும் சிவனடியாருக்கு உணவு கொடுத்து உபசரித்த பின்னரே தாம் உணவு உண்ணும் வழக்கம் உடைய சிறுத்தொண்டர் சிவனடியாரைத் தேடி வெளி யில் சென்றிருந்தார். இல்லம் வந்த வயிரவர் சிறுத் தொண்டர் இல்லாதது கண்டு அம்மையாரிடம் தாம் கணபதீசுரம் அத்தி மரத்தின் கீழ் அமர்ந்துள்ளோம், சிறுத்தொண்டர் வந்தவுடன் உரைப்பீர் என்று கூறிச் சென்றார். சிவனடியார் எவரும் காணாது ஏமாற்றத்துடன் இல்லம் திரும்பிய சிறுத்தொண்டரிடம் அவரது மனைவியார் வயிரவர் வந்த விபரம் கூற, அவரும் அகமகிழ்ந்து அத்திமர நிழலில் அமர்ந்துள்ள வயிரவரை வணங்கி உணவு உண்ண தம் இல்லம் வருமாறு அழைத்தார். ஒரு குடும்பத்துக்கு ஒரு நல்ல சிறுவனாய் ஒரே மகனாக ஐந்து வயது உள்ள அவனைத் தம் தாயார் பிடித்துக் கொள்ள தந்தை அரிந்து அந்த இறைச்சியில் சமைத்த உணவே தனக்கு வேண்டும் என்று வயிரவர் சிறுத் தொண்டரிடம் கூறினார். அதனைச் சிறுத்தொண்டரும் ஏற்றுக்கொண்டு தம் முடைய மகன் சீராளனையே தம் மனைவியைப் பிடித்துக்கொள்ளச் செய்து தாமே தம் மகனின் கழுத்தை அரிந்து சமைக்க அதனைத் தாதி சந்தனத்திடம் கொடுத்தார்.

மற்ற உறுப்புகளை அரிந்து கறி உணவை சுவைபட சமைத்து வயிரவரை உணவு உண்ண வருமாறு சிறுத்தொண்டர் அழைத்தார். வயிரவரும் உணவு உண்ண அமர்ந்து கொள்ள அவருக்கு சமைத்த கறி உணவை பரிமாறினார். வயிரவர் தாம் தனியாக அமர்ந்து உணவு உண்பது இல்லை, எனவே தாங்களும் என் னோடு அமர்ந்து உணவு உண்ண வேண்டும் என அழைக்க சிறுத்தொண்டரும் அமர்ந்து கொண்டார். உணவு உண்ணும் வேளையில் வயிரவர் சிறுத்தொண்ட ரிடம் தங்கள் மகனையும் அழைத்து வாருங்கள் எல்லோரும் சேர்ந்து உண்போம் என்று கூற அதற்கு சிறுத்தொண்டர் தம் மகன் வர இயலாத நிலை யில் உள்ளான் என பதிலளித்தார். அதற்கு வயிரவர்

## பக்தியோடு செய்தால் பலன் உண்டு

இறைவன்மேல் புஷ்பத்தைப் போட்டால் பலன் கிடைக்கும் என்பது நம் யாவருக்கும் தெரியும். ஆனால் அதைப் போடும்போது பக்தி பாவனை சரியாக இருக்க வேண்டும்.

மன்மதனும் சிவபெருமான் மீது புஷ்பத்தைத் தான் பாணமாக விட்டான். ஆனால் என்ன நடந்தது? சிவபெருமானின் கோபத்தை அது தூண்டிவிட அவனுடைய அழிவுக்கே அது காரணமாகி விட்டது.

- நீலகண்ட தீட்சிதர்

அவனை நாடி அழையுங்கள் அவன் வருவான் என்று பணித்தார்.

சிறுத்தொண்டரும் அவரது மனைவியும் வாசலில் சென்று மகன் சீராளனை அழைக்க மகனும் பள்ளியில் இருந்து ஓடி வருபவன் போல ஓடி வந்தான். மகனைக் கண்ட பெற்றோர் பெருமகிழ்ச்சியோடு அவனை அழைத்துக்கொண்டு வீட்டின் உள்ளே சென்ற பொழுது வயிரவரும் சமைத்த கறி உணவும் காணாமல் இருப்பதைக் கண்டு கலங்கி திகைத்து வெளியே சென்று பார்த்தனர். அப்பொழுது இறைவன் உமையொரு பாகராய் தம் மைந்தன் முருகப் பெருமானோடு அவர்களுக்கு காட்சி அளித்தார். இறைவனைக் கண்ட இவர்கள் அவரது காலடி மலர்களில் விழுந்து வணங்கி வேண்டி நின்றனர். இறைவன் சிறுத்தொண்டரையும், மனைவி திருவெண்காட்டு நங்கையும், மகன் சீராளனையும் தாதி சந்தனத்தையும் அருள் பாலித்து அவர்கள் என்றும் பிரியாது தம்முடன் இருக்க சிவலோகம் அழைத்துச் சென்றார்.


பட்டினத்தடிகளார் பாராட்டிப் பாடிய மூன்று நாயன்மார்களுள் ''வாளால் மகவரிந்து ஊட்ட வல்லேன் அல்லேன்'' என்று சிறுத்தொண்டரைப் பற்றி சிறப்பிக்கிறார். நாயன்மார்கள் அறுபத்து மூவருள் இத்துணை சிறப்புப்பெற்ற சிறுத்தொண்டருக்கு திருச்செங்காட்டாங்குடியில் உள்ள கோயிலை அடுத்து திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல் - கரூர் (எரியோடு வழி) நால் ரோடு அருகில் செண்டு வழி கிராமத்தில் மட்டுமே ஸ்ரீசீராள சிறுத்தொண்டர் திருக்கோயில் உள்ளது. கோயில் மேற்கு பக்கமாக உள்ளது. கோயில் மூலவர்களாக சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சீராளன் உள்ளார்கள். மேலும் சிவன், நந்தி, விநாயகர், முருகன் தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மூன்று வேளை பூஜைகளும் சிறப்பாக நடைபெறும் இக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் மகா சிவராத்திரி அன்று விசேஷ பூஜை நடைபெற்று வருகிறது.

இக்கோயிலில் வழிபட்டால் தீராத நோய் உள்ள குழந்தைகளுக்கு நோய் தீருவதாகவும், குழந்தைபேறு இல்லாதவர்களுக்கு குழந்தை பேறும், மணமாகாதவர்களுக்குத் திருமணம் கைகூடும் என்பதும் ஆன்மீக அன்பர்கள் நம்பிக்கை.

பெருமை மிகுந்த இத்திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 24.02.1999 அன்று மகா கும்பாபிஷேகம் சிறப்புறச் செய்யப்பட்டு தினமும் அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

குறிப்பு : திண்டுக்கல் - கரூர் (எரியோடு வழி) நால் ரோட்டில் - செண்டு வழி, 1 கி.மீட்டரில் இக்கோயில் உள்ளது.

***





சென்னை அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில் 15.8.2002 சுதந்திரத் திருநாள் அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு எம்.சி. சம்பத் அவர்களால் அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப் பெற்றது. சட்டமன்ற உறுப்பினர் திருமிகு பி.கே. சேகர்பாபு அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு எஸ். சற்குரு பி.ஏ. அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.





மயிலை அருள்மிகு முண்டகக் கன்னி அம்மன் திருக்கோயிலில் 15–8–2002 சுதந்திரத் திருநாள் அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி அன்னதானத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா இ.ஆ.ப., அவர்கள், அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப., அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : ***பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,*** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.